


Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 309 பிலவ வருடம், ஆவணி மாதம் 05ஆம் திகதி சனிக்கிழமை
(21.08.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 11, 0115886187 - பக்கங்கள் 08

'தமிழன்' மின்னிதழ் பதிப்பு e-Paper

## டெல்ட்டா அறிகுறி முதல் நாளிலேயே தென்படும்

•நா.தினுஷா

டெல்ட்டா தொற்றுக்குள்ளானவர்களின் மாதிரிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் பின்னர் அவர்களுக்கு ஒன்று முதல் 8 நாட்களில் நோய் அறிகுறிகள் தென்படுவதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை நோயெதிர்ப்பு மற்றும் உயிரியல் மூலக்கூறு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். 02»



நாடு தொடர்ச்சியாக 10 நாட்களுக்கு முடக்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்ததையடுத்து, நேற்று கொழும்பின் பல்வேறு பிரதேசங்களில் மக்கள் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக காத்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

(படப்பிடிப்பு : லலித் பெரேரா)

## எரிபொருள் பற்றாக்குறை கிடையாது

### அமைச்சர் கம்மன்பில

02»



# ஓகஸ்ட் 30 வரை நாடு முடக்கம்

## தனிமைப்படுத்தல் ஊரடங்கும் அமுலென இராணுவத் தளபதி அறிவிப்பு



•யோ.தர்மராஜ்

கொரோனா தொற்று தீவிரத்தால் நேற்று இரவு 10 மணிமுதல் எதிர்வரும் 30ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை முழுமையாக நாடு முடக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா நேற்று தெரிவித்தார்.

ஜனாதிபதி மற்றும் கொவிட்-19 தடுப்புக்கான தேசிய செயலணி ஆகியவற்றுக்கிடையே நேற்றுக் காலை இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. 02»

## நான்கு வைத்தியர்கள் உட்பட 17 பேருக்கு கொவிட் தொற்று

### டிக்கோயா வைத்தியசாலை நடவடிக்கைகள் பாதிப்பு


•எம்.கிருஸ்ணா

டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் நான்கு வைத்தியர்கள் உட்பட 17 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலை ஊழியர்கள் 07 பேர், தாதியர்கள் 06 பேர் மற்றும் வைத்தியர்கள் நால்வருமாக 17 பேருக்கே இவ்வாறு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், வைத்தியசாலையில் கொரோனா தொற்று நோயாளர் பிரிவில் அதிக எண்ணிக்கையிலானோர் சிகிச்சைபெற்று வருவதுடன், வைத்திய சேவை நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு தொற்றுக்குள்ளான 17 பேரையும் கொரோனா சிகிச்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களோடு தொடர்பைப் பேணியவர்களை சுயதனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.



இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ ஒட்சிசன் தொகையை நாட்டுக்கு கொண்டுவருவதற்காக திருகோணமலை துறைமுகத்திலிருந்து புறப்பட்ட 'சக்தி' கப்பல், ஒட்சிசன் கொள்கலன்களை ஏற்றிக்கொண்டு நேற்றுக் காலை சென்னை துறைமுகத்திலிருந்து இலங்கை நோக்கி புறப்பட்டுள்ளது.

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் இடமாற்றம் செய்யப்படுகிறாரா?

### அரச உயர்மட்டங்களில் தகவல்

•யோ.தர்மராஜ்

சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளின் பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக அரச உயர்மட்டங்களிலிருந்து அறியமுடிந்தது.

கொரோனா கட்டுப்பாட்டுக்கு உரிய ஒத்துழைப்பு வழங்காதமையினால் இந்த மாற்றங்களை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

குறிப்பாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தனவின் ஒத்துழைப்பு போதுமானதாக இல்லை என்பதால் உடனடியாக பதவியில்... 02»

## டீசல், சமையல் எரிவாயு மண்ணெண்ணெய்க்கு

### நுவரெலியாவில் பெரும் தட்டுப்பாடு



•நுவரெலியா செய்தியாளர்

நுவரெலியாவில் பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய்க்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. நுவரெலியா-வெளிமடை வீதியில் தர்மபால சுற்றுவட்டாரத்திற்கு அருகிலுள்ள பெற்றோல் நிரப்பும் நிலையத்திலும் நுவரெலியா - கண்டி வீதியிலுள்ள பெற்றோல் நிரப்பும் நிலையத்திலும் நேற்று சமையல் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள பாவனையாளர்கள் சுகாதார வழிமுறைகளையும் மீறி ஒருவருக்கொருவர் முண்டியடித்துக்கொண்டு செல்வதைக் காணமுடிந்தது.

அதேபோல் வாகனங்களுக்கு பெற்றோல், டீசல் பெற்றுக்கொள்வதற்கும் வாகன நெரிசலும் காணப்பட்டது. இதேவேளை, நுவரெலியா பொலிஸார் ஒருவழிப் பாதையாக மாற்றி வாகன நெரிசலை கட்டுப்படுத்தினர். நுவரெலியா நகர கடைகளில் மண்ணெண்ணெய் நிரப்பும் தாங்கிகள் பெற்றுக்கொள்ள முடியாமல் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

## பாரதூரமான நிலையில் நாடு; சுகாதாரத்துறை ஸ்தம்பிதம்

### மருந்துகளுக்கு பற்றாக்குறை நிலவுவதாக ராஜித எம்.பி. குற்றச்சாட்டு



•நா.தினுஷா

கொரோனா மரண வீதத்தைப் பார்க்கும்போது உலக நாடுகளில் மிகவும் பாரதூரமான நிலையில் இலங்கை இருக்கிறது. சுகாதாரத்துறைக்கு கறுப்பு கரையை அரசாங்கம் ஏற்படுத்திவிட்டது. என்றுமில்லாதவாறு சுகாதாரத்துறை ஸ்தம்பித்துள்ளதுடன், சுகாதார சேவைப் பிரிவினர் நம்பிக்கை இழந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார். 02»

## நாட்டை முடக்குவதாயின் பணியாளர் சம்பளத்தில் ஒரு தொகையை அறவிடுக!

### அமைச்சர் பிரசன்ன ஜனாதிபதிக்கு கடிதம்



தயவுசெய்து நாட்டை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டாம் என வலியுறுத்தி சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில், நாட்டை முடக்க முன் அன்றாடம் வருமானத்திற்காக உழைப்பவர்கள் பற்றி கவனம் செலுத்தும் படியும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். 02»






மஸ்கெலியா பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துக்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஐயாயிரத்து 600 பேருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றப்பட்டது. இதன்போது 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் பெருமளவானோர் கலந்துகொண்டு தடுப்பூசி பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:- எம்.கிருஸ்ணா)





கொரோனா தொற்றுப் பரவல் அதிகரித்துள்ளதனால் காவத்தை நகரிலுள்ள அத்தியாவசிய வர்த்தக நிலையங்களைத் தவிர, ஏனைய சகல வர்த்தக நிலையங்களும் நேற்று மூடப்பட்டிருந்ததை படங்களில் காணலாம். (படங்கள் :- சிவா ஸ்ரீதரராவ்)




கேகாலை, எட்டியாந்தோட்டை நகரில் பெற்றோல், டீசல் பெற்றுக்கொள்வதற்காக பொதுமக்கள் தங்கள் வாகனங்களுடன் நேற்று நீண்ட வரிசையில் பல மணிநேரம் காத்திருந்தனர். இதனால் வாகன நெரிசல் அதிகரித்துக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படங்கள் :- அருண் யுகேஷ்)

# தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

நாட்டில் நேற்றிரவு 10 மணிமுதல் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணிவரை நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இதுவரையில் தடுப்பூசி ஏற்றப்படாத 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி வழங்குவதை இலக்காகக்கொண்டு இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன், செப்டெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர், அவர்கள் அனைவருக்கும் தடுப்பூசியை வழங்கி முடிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் கிராமிய கொவிட் ஒழிப்புக் குழுக்கள் மூலம் இந்த நபர்களை அடையாளம் கண்டு தடுப்பூசி ஏற்ற 23ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் சுகாதாரப் பிரிவுக்கு அறிக்கை அளிக்கப்பட வேண்டும். மேலும், 1906 என்ற அவசர இலக்கத்துக்கு அல்லது தேசிய கொவிட் ஒழிப்பு மையத்துடன் தொடர்புகொண்டு பதிவுசெய்யும் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இந்தத் தடுப்பூசித் திட்டத்தை, இராணுவத் தளபதியின் மேற்பார்வையின்கீழ், சுகாதாரத்துறையின் அறிவுறுத்தல்படி மேற்கொள்ளவும் முடிவெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி அலுவலகத்தில் கொவிட் ஒழிப்பு விசேட குழுவுடன் நேற்று முற்பகல் இடம்பெற்ற சந்திப்பின்போதே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.




ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், கொழும்பிலுள்ள வர்த்தக நிலையங்கள், அங்காடிகள் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் முண்டியடித்துக்கொண்டு நீண்ட வரிசைகளில் நின்று நேற்று மாலை பொருட்களைக் கொள்வனவு செய்ததைக் காணமுடிந்தது. (படங்கள் : ஏ.எஸ்.எம்.ஜாவித்)



கொரோனா தொற்றுப் பரவல் அதிகரித்துள்ளதனால் இறக்குவானை நகரிலுள்ள அத்தியாவசிய வர்த்தக நிலையங்களைத் தவிர, ஏனைய சகல வர்த்தக நிலையங்களும் நேற்று மூடப்பட்டிருந்தன. (படங்கள் :- சிவா ஸ்ரீதரராவ்)

### டெல்ட்டா அறிகுறி...

நாட்டில் சராசரியாக அடையாளங்காணப்பட்டுள்ள கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுக்கு 5 முதல் 8 நாட்களின் பின்னர் நோய் அறிகுறிகள் தென்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 201 பேருக்கு டெல்ட்டா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். டெல்ட்டா தொற்றுப்பரவல் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொழும்பில் அடையாளங்காணப்படும் கொரோனா நோயாளர்களில் நூற்றுக்கு 90 வீதமானவர்கள் டெல்ட்டா தொற்றுக்குள்ளானவர்கள் என்று அனுமானிக்க முடியும். கொழும்பு தவிர, நாட்டிலுள்ள ஏனைய பிரதேசங்களில் அபாய நிலையற்ற குறைந்தளவான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அல்பா வைரஸ் திரிபே பரவலடைந்து வருகின்றது.

100 வரையிலான உலக நாடுகளில் அதிக தீவிரத்தன்மை கொண்ட டெல்ட்டா திரிபு பரவலடைந்துள்ளது. டெல்ட்டா தொற்றுப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிட்டால் எதிர்காலத்தில் மரணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

முகக்கவசத்தை அகற்றும் 5 விநாடிகளில் டெல்ட்டா தொற்று தாக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமென ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. டெல்ட்டா தொற்றுக்குள்ளான நோயாளர்களில் அநேகமானவர்கள் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, இரத்தினபுரி, தம்புள்ளை, கண்டி, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசங்களில் அதிகளவில் இனங்காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

### எரிபொருள் பற்றாக்குறை...

நாட்டில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு கிடையாது என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதாக பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில் இதுகுறித்து அவர் ட்விட்டர் தளத்தில் பதிவுசெய்துள்ளார்.

எரிபொருளுக்குத் தட்டுப்பாடு கிடையாது. அவ்வாறிருந்தால் நான் முதலிலேயே சொல்லியிருப்பேன். நான் மக்களுக்கு உண்மையாக இருக்கிறேன். அதன் காரணமாகவே எரிபொருள் விலை அதிகரிப்பு குறித்து முன்கூட்டியே அறிவித்திருந்தேன். அதேபோல் வெளிநாட்டு நாணய நெருக்கடி குறித்தும் முதலில் அறியத்தந்திருந்தேன் எனத் தெரிவித்துள்ளார்.

### சுகாதார சேவைகள்...

மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிந்தது.

ஜனாதிபதி மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு செயலணிக்கும் இடையிலான சந்திப்பின்போது இது குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளதாகவும் அறியமுடிந்தது.

சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகம் வைத்திய அசேல குணவர்தனவுக்கு வேறு பதவி ஒன்றை வழங்கிவிட்டு, வைத்தியர் அமல் ஹர்ஷ டி சில்வாவை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக நியமிப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக அறியமுடிந்தது.

இந்தப் பதவி மாற்றங்களை முன்னெடுப்பதற்கு அரச சேவை ஆணைக்குழு மற்றும் அமைச்சரவை குழுவின் அனுமதியையும் பெற்றுக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்தோடு, கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களின் விசேட வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள் இருவரையும் இடமாற்றம் செய்வது குறித்தும் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

### ஓகஸ்ட் 30 வரை...

கொரோனா தொற்று தீவிரத்தால் நாட்டை முழுமையாக முடக்குமாறு பல தரப்பினரும் கோரியிருந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் மல்வத்துவ மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாசங்கத்தினர் மற்றும் அரசின் 10 பங்காளிக்கட்சிகளும் நாட்டை குறைந்தது 2 முதல் 3 வாரங்களுக்கு முடக்குமாறு கடிதங்கள் மூலம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையிலேயே ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது நாட்டை முடக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, நேற்று இரவு 10 மணிமுதல் எதிர்வரும் 30ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. எனினும், இந்தக் காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகள், ஆடைத் தொழிற்சாலைகள், விவசாய செயற்பாடுகள் மற்றும் மருந்துகள் வழங்குதல், பெற்றுக்கொள்ளல் போன்ற செயற்பாடுகள் எவ்விதத் தடையுமின்றி முன்னெடுக்கப்படும் எனவும் இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தக் காலப்பகுதியில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வீடுகளுக்குச் சென்று தடுப்பூசி வழங்கும் செயத்திட்டம் இராணுவ மற்றும் சுகாதாரத்துறையினரால் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### நாட்டை முடக்குவதாயின்...

மேலும், நாட்டை முடக்குவதாயின் சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவினரை தவிர்ந்த ஏனைய அனைத்துத் தரப்பினரின் சம்பளத்திலிருந்தும் குறிப்பிட்ட ஒருதொகையை அரசாங்கம் அறவிடவேண்டுமென அவர் யோசனையொன்றை முன்வைத்துள்ளார்.

அதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்திலிருந்து 75 சதவீத தொகையும், அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து 50 சதவீதமும், சிறுதொழில் செய்யும் தொழிலாளர்களிடமிருந்து 30 சதவீதமும் அரசாங்கம் அறவிட வேண்டுமென அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை முடக்குவதற்கு ஜனாதிபதி தீர்மானித்தால் சுகாதாரத்துறையினர், பாதுகாப்புத்துறை உள்ளிட்டு கொரோனா கட்டுப்பாட்டுக்காக செயற்படும் துறைகளை அடையாளங்கண்டு, ஏனைய துறையினர் சம்பளத்தில் ஒரு பகுதியை தியாகம் செய்து பொருளாதாரத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாடு முடக்கப்பட்டிருந்தால் நான் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தில் 75 வீதத்தையும் அரச மற்றும் தனியார்துறையில் சேவையாற்றுவோரில் 50 வீதத்தையும் சிறு தொழிலாளர்களில் 30 வீதத்தையும் தியாகம் செய்யுமாறு தான் யோசனையொன்றை முன்வைப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

### பாரதூரமான நிலையில்...

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு என்ன நடக்கிறது என சர்வதேசம் அவதானித்துக்கொண்டிருக்கிறது. எமது சுகாதாரத் துறைக்கு கறுப்பு கரையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டும் அறிக்கைகளை அவதானிக் கும்போது நாளொன்றுக்கு 170இற்கும் அதிகமானவர்கள் கொரோனாவால் உயிரிழக்கும் நிலை உருவாகியுள்ளது. நிலைமை இவ்வாறிருக்கையில், இவ்வளவு காலமும் வாயை மூடிக்கொண்டிருந்த அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம், அரசங்கத்தினால் தற்போது வெளியிடப்படும் மரணங்கள் தொடர்பான அறிக்கைகள் போலியானவை எனவும் நாளொன்றுக்கு 250 பேருக்கும் அதிகமானவர்கள் உயிரிழப்பதாகவும் தெரிவிக்கின்றது.

உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட நிபுணர்களின் அறிவித்தலுக்கமைய இந்த வருடம் முடிவடையும் 30 ஆயிரம் பேர் வரையில் கொரோனாவால் உயிரிழப்பார்கள். தற்போதைய நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக நடவடிக்கைகள் எடுக்காவிட்டாலோ, நாட்டை உடனடியாக முடக்க நடவடிக்கை எடுக்காவிட்டாலோ நிபுணர்களின் கூற்றின்படி 30 ஆயிரம் பேர் வரையில் உயிரிழப்பார்கள். நாட்டை முடக்கினால் 18 ஆயிரம் வரையிலானவர்களை எம்மால் பாதுகாக்கக்கூடியதாக இருக்கும்.

எது என்னவானாலும் உயர்பீடத்திலுள்ளவர்களுக்கு மக்களின் உயிர்களின் பெறுமதி தெரியவில்லை. அவ்வாறானதொரு நிலைமையே உருவாகியுள்ளது. தடுப்பூசி வழங்குவதால் உயிரிழப்பவர்களை காப்பாற்ற முடியாது. முதலாம் கட்டமாக சினோபார்ம் தடுப்பூசி வழங்கிவிட்டோம் என்பதற்காக அதனால் எந்த எதிர்ப்புச் சக்தியும் ஏற்படப்போவதில்லை. இரண்டாம் கட்ட தடுப்பூசி பெற்றுக்கொண்டதன் பின்னர் இருவாரங்கள் கழிந்ததன் பின்னரே நோய் எதிர்ப்புச் சக்தி கிடைக்கிறது. எஸ்ட்ராசெனிக்கா, பைஸர், மொடர்னா போன்ற தடுப்பூசிகளில் 40 - 70 சதவீதம் வரையில் ஓரளவு முன்னேற்றத்தை காணக்கூடியதாக இருக்கும். தடுப்பூசிகளை ஆரம்பத்திலேயே வழங்கியிருக்க வேண்டும். தற்போது விறுவிறுப்பாக தடுப்பூசிகளை வழங்கினால், அதற்கான காலம் கடந்துவிட்டது.

சுகாதாரத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சி இன்றும் பிரதேச சுகாதாரப் பிரிவுகள் வரை ஸ்தம்பிக்கும் நிலை உருவாகியுள்ளது. சுகாதார சேவைப் பிரிவினர் இன்று நம்பிக்கையை இழந்துள்ளனர். தமது சேவையால் எதிர்பார்க்குமளவுக்கு எந்த பிரதிபலனும் கிடைக்கப்போவதில்லை என்று சுகாதார சேவைப் பிரிவினர் மனவிரக்தியை சந்தித்துள்ளனர்.

தேவையான அடிப்படை வசதிகள், மருந்துகள் இல்லாமல் போதிய சிகிச்சையின்றி அநேகமான நோயாளர்கள் உயிரிழக்கும் நிலை உருவாகியுள்ளது.

வரலாறு சந்திக்காத இக்கட்டான நிலைமையை சுகாதாரத்துறை சந்தித்துள்ளது. சுகாதாரத்துறையில் காணப்படும் குறைப்பாடுகளினாலேயே நோய் நிலைமை பாரதூர நிலையை சந்தித்துள்ளது. நான் தனியாக செய்த பணிகளை முன்னெடுத்துச் செல்ல இன்று நால்வர் செய்கிறார்கள். ஆனால், எந்த முறையான திட்டங்களும் முன்னெடுக்கப்படுவதில்லை. நாடு இக்கட்டான சூழ்நிலையை சந்தித்து வருகின்ற நிலையில் எதிர்க்கட்சித் தலைவரை குற்றஞ்சாட்டுகிறார்கள். 'டொசிலிசுமாப்' என்ற மருந்து மாத்திரமல்ல இன்னும் அநேகமான மருந்துகளுக்கு பற்றாக்குறை நிலை ஏற்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்

நாள்: 21.08.2021 சனிக்கிழமை – ஆவணி 05

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

| சுப நேரங்கள் | அசுப நேரங்கள் | |
|---|---|---|
| பகல் 1.45 - 3.15 | ராகு காலம்: மாலை 4.47 - 6.19 | எமகண்ட காலம்: பி.ப. 12.13 - 1.44 |
| | குளிகை காலம்: மாலை 3.16 - 4.47 | துர் முகூர்த்தம்: மாலை 4.41 - 5.30 |

**மேடம்** குருவின் கர்ம பதிவையும், செவ்வாயின் மூல திரிகோணத்தையும் உடைய மேஷம். வியாபாரத்தில் அதிக லாபம் பெறும் ஒப்பந்தங்கள் உருவாகும். இல்லத்தில் மங்களகரமான நிகழ்வுகளின் அறிகுறிகள் தோன்றலாம். பணக்கவலைகள் தோன்றும். கையொப்பம் இடும் ஆவணங்களில் கவனம் தேவை

**ரிஷபம்** சந்திரன் மூல திரிகோணத்தையும், ராகுவின் உச்சத்தையும், குருவின் கர்ம பதிவையும் உடைய ரிஷபம். வணிக மேம்பாட்டுக்கு தேவையான புதிய தயாரிப்பு அல்லது நுட்பம் ஏற்படலாம். பணிகளில் மற்றவர்களின் கருத்துகளுக்கு எதிர்வினை கொள்வதை தவிர்க்கவும். கல்வியில் அதிக முயற்சி தேவைப்படலாம்.

**மிதுனம்** கிரக திருஷ்டி/கிரகங்கள் நின்ற நிலை காரணமாக பொருளாதாரம், இல்லற வாழ்க்கை மற்றும் கௌரவம் மேம்படும். தவறவிட்ட தொழில் வாய்ப்புகள் கிடைக்கலாம்.

**கடகம்** பணியிடங்களில் உயர்பதவியில் இருப்பவர்கள் உங்களுக்கு சாதகமாக இருப்பார்களை. நிதி நிலையில் சிறிய கவலை தோன்றலாம். உடல்நலத்திற்கு தீங்கான சில விடயங்களை நிறுத்தவது நல்லது. அல்லது உடல் நலம் பாதிக்கப்படலாம்.
சந்திராஷ்டமம்: பூசம் நட்சத்திரத்திற்கு 22.08.2021 பிற்பகல் 1.48லிருந்து 23.08.2021 பிற்பகல் 1.26 வரை

**சிம்மம்** சூரியனின் ஆட்சியும், குருவின் கர்ம பதிவையும் கொண்ட சிம்மம். உற்பத்தியாளர்களுக்கு நன்மை. மனைவி/கணவர் உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம். வீடு வாங்கும் அல்லது வாடகைக்கு விடும் நிலை ஏற்படலாம். பணிகளில் சிறப்பான நிலை தோன்றும்.

**கன்னி** சனி மற்றும் ராகுவின் கர்ம பதிவைகொண்ட கன்னி ராசி. செல்வ வளங்கள் உண்டாகலாம். உறவுகளில் உடல்நலம் பாதிக்கப்படலாம். வெளிநாட்டு விடயங்களில் சுப செய்திகள் கிடைக்கக்கூடும். பண விடயங்கள் நிலையற்ற தன்மை பெறும்.

**துலாம்** சந்திரனின் கர்ம பதிவையும், சுக்கிரனின் ஆட்சியும் கொண்ட துலாம். கடன் கொடுப்பதில் கவனம் தேவைப்படலாம். உங்கள் பலவீனங்கள் சிலருக்கு பலமாகலாம். இறையருளால் நன்மை தேடுங்கள். வேண்டிய ஒருவரின் வாழ்க்கையில் எதிர்பாராத சூழ்நிலை மன கவலையை தரலாம்.

**விருச்சிகம்** கேது உச்சம் பெறும் விருச்சிகம். அதிக முதலீட்டில் செய்யும் தயாரிப்பு அல்லது சேவை தொழில்களை ஆராய்ந்து செய்வது நன்மை. இல்லத்தில் மாற்றங்களுக்குத் தேவையான விடயங்களில் கவனம் உண்டாகலாம். எதிர்மறை சிந்தனைகளை தவிர்ப்பது நன்மை.

**தனுசு** குருவின் ஆட்சியும், ராகுவின் கர்ம பதிவைகொண்ட தனுசு. பெற்றோரின் உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம். வணிக பங்குதாரர்களினால் கவலை உண்டாகலாம். மாணவர்களின் கல்வி நிலை மேம்படும்.

**மகரம்** வியாபாரிகள் தொழில் சம்பந்தப்பட்ட விடயங்களில் அல்லது ஒப்பந்தங்களில் அதிக கவனத்துடன் இருப்பது நன்மை. வீடு/காணி ஆகியவற்றில் முதலீடு செய்யும் விருப்பங்கள் நன்மை தரும். விரும்பத்தகாத கருத்துகளை தேடுதல் விடயங்களில் கவனம் தேவைப்படலாம்.

**கும்பம்** சனைச்சரனின் ஆட்சியும், இணை அதிபதியாக ராகுவும், செவ்வாயின் கர்ம பதிவையும் கொண்ட கும்பம். நிதி உதவிகள் கிடைக்கப்பெறலாம். தவறான தகவலால் யாரையும் குற்றம் சொல்லாது பொறுத்திருப்பது கௌரவம் தரலாம். வீட்டு வேலைகள் நிறைவேறும்.

**மீனம்** குருவின் ஆட்சியும், சூரியனின் கர்ம பதிவையும் கொண்ட மீனம். பண விடயங்களில் இறையருள்/கிரக சூழல் நன்மை தரும். பண விடயங்களில் கவனமும் தேவைப்படலாம். வயதில் மூத்த குடும்ப உறவுகளின் ஆலோசனை நன்மை தரும். முன்பு செய்த தொழில் அல்லது வேலைகளில் தொடர்புண்டாகலாம்.

## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 3,73,165 | 47,847 | 3,18,714 | 3,806 | 6,79 |

# நிதி அமைச்சர் பெசிலுடன் நோர்வே தூதுவர் சந்திப்பு



நோர்வே தூதுவர் ட்ரைன் ஜெரான்லி எஸ்கடேல், நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவுடன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டுள்ளார்.

இலங்கையில் நோர்வேயின் முதலீடுகளை அதிகரிக்கும் வழிமுறைகள், கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக எழுந்துள்ள பொருளாதாரச் சவால்கள் மற்றும் அடுத்து வரும் ஆண்டுகளில் பொருளாதார மீட்சிக்கான வழிமுறைகள் குறித்து இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இலங்கையில் முன்னெடுக்கப்படும் கொவிட்-19 தடுப்பூசி வழங்கும் திட்டத்துக்காக அமைச்சருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், கொவிட் நிலைமை சீராகும் சந்தர்ப்பத்தில் சுற்றுலாத்துறையை முழு அளவில் மீள ஆரம்பிக்கக்கூடியதாக இருக்குமென தூதுவர் குறிப்பிட்டார்.

கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக பல நாடுகளில் காணப்படும் எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி மற்றும் அதிகளவு தொழில்வாய்ப்புகள் இல்லாமல் போயிருத்தல் போன்றன தொடர்பான சவால்கள் பற்றியும் அவர் குறிப்பிட்டிருந்ததுடன், இந்தச் சவால்களை நோர்வே எவ்வாறு கையாண்டிருந்தது என்பது பற்றியும் குறிப்பிட்டார். இலங்கை ஜனாதிபதி, நாட்டில் புதுப்பிக்கத்தக்க வலுவை அதிகரிப்பது தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள முதலீடுகள் அவற்றை மேற்கொள்வதற்கான வழிமுறைகள் பற்றியும் இந்தக் கலந்துரையாடலின்போது பேசப்பட்டிருந்தன.

நோர்வே தூதரகத்தின் பிரதி தலைமை அதிகாரி ஹில்டே பேர்க்-ஹன்சன் மற்றும் வெளிநாட்டு அமைச்சின் இடைக்கால மேலதிக செயலாளர் பி.எம்.அம்ஸா, பொருளாதார மீட்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் இணைச் செயலாளர் அன்டன் பெரேரா மற்றும் தேசிய அபிவிருத்திக்கான ஊடக நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மிலிந்த ராஜபக்ஷ ஆகியோரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

# சுகாதார முறைகளை மீறிய திருமண நிகழ்வுக்குத் தடை

## கலந்துகொண்ட அனைவரும் மண்டபத்திலிருந்து வெளியேற்றம்



(எம்.கிருஸ்ணா)

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரியபுர பகுதியிலுள்ள திருமண மண்டபத்தில் சுகாதார விதிமுறைகளை மீறி இடம்பெற்ற திருமண நிகழ்வொன்று இடைநிறுத்தப்பட்டதாக பொகவந்தலாவ பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

நாட்டில் தீவிரமடைந்துவரும் கொரோனா தொற்று காரணமாக திருமண நிகழ்வு மற்றும் பொது நிகழ்வுகளுக்கு அரசாங்கத்தினால் தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில், சுகாதார விதிமுறையை மீறி இந்தத் திருமண நிகழ்வு பொகவந்தலாவ ஆரியபுர பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்டதாகவும் குறித்த திருமண நிகழ்வுக்கு 25இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டதாகவும் சுகாதார தரப்பினர் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய குறித்த திருமண மண்டபத்திற்கு விரைந்த பொகவந்தலாவ பொதுச் சுகாதார அதிகாரிகள், பொகவந்தலாவ பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் திருமண மண்டபத்தில் இருந்த அனைவரையும் அங்கிருந்து வெளியேறுமாறு தெரிவித்து திருமண நிகழ்விற்கு மணமகள் மற்றும் மணமகனின் பெற்றோர்கள் மாத்திரம் கலந்துகொள்ள முடியுமெனவும் எச்சரித்தனர்.







முந்தல் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட உடப்பு கிராமத்தில் வாழும் மக்களுக்கான கொவிட்- 19 தடுப்பூசியின் இரண்டாம் கட்டம் ஏற்றும் பணி நேற்று உடப்பு கிராமிய வைத்தியசாலை மற்றும் ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயத்தில் முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: உடப்பு செய்தியாளர்)

# எவ்வித நோய் அறிகுறிகளற்றவர்களும் கொவிட் தொற்றால் மரணம்

## மக்களை அவதானமாக இருக்குமாறு வவுனியா சுகாதாரப் பிரிவினர் கோரிக்கை

(வவுனியா நிருபர்)

நோய்களுக்குரிய எந்தவித அறிகுறிகளும் அற்றவர்களும் கொவிட் தொற்றால் மரணமடைவதால் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் - என வவுனியா சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, பெரியார்குளம், சாந்தசோலை வீதியிலுள்ள வீடொன்றில் வசித்துவந்த 73 வயதுடைய பெண் ஒருவர் நேற்று முன்தினம் மரணமடைந்திருந்தார். குறித்த பெண் எந்தவித நோய்களுமற்ற நிலையில் இருந்ததுடன், கொவிட் தொற்றுக்கான அறிகுறிகளும் அற்றவராகவே இருந்துள்ளார்.

குறித்த பெண் திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டு மரணமடைந்திருந்தார். மரணமடைந்த பின் அவரது சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதனையடுத்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அவருடைய உடலை தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதுடன், அவருடைய குடும்பத்தினர் மற்றும் தொடர்புகளைப் பேணியோர் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களிடம் நேற்றுக் காலை அன்ரிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் எவருக்கும் கொவிட் தொற்று உறுதிசெய்யப்படவில்லை. இதேபோன்று, தெற்றுக்கான அறிகுறிகள் இல்லாதவர்களும் கொவிட் தாக்கம் காரணமாக மரணமடைந்து வருகின்றனர். எனவே, மக்கள் நிலைமையை உணர்ந்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சுய கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டும் - என வவுனியா சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# ‘சமுர்த்தி அருணலு’ வேலைத்திட்டத்தை வினைத்திறனாகப் பயன்படுத்துங்கள்

## அங்கஜன் எம்.பி. வேண்டுகோள்



(சாவகச்சேரி நிருபர்)

அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் மனைப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான வறுமை ஒழிப்பு வேலைத்திட்டத்தை பயனாளிகள் வினைத்திறனாகப் பயன்படுத்த வேண்டும் - என யாழ். அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், யாழ். திட்ட மேற்பார்வையாளருமான அங்கஜன் இராமநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

அரசாங்கத்தால் வழங்கப்படும் மனைப் பொருளாதாரத்தை விருத்திசெய்வதற்கான சமுர்த்தி அருணலு உதவித்திட்டம் எமது பிரதேசத்தின் வறுமையைப் போக்குவதற்கான சிறந்ததொரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. எனவே, இந்த உதவித் திட்டத்தைப் பெறும் ஒவ்வொருவரும் அதனை வினைத்திறனாகப் பயன்படுத்தி தத்தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் – என்றார்.

‘சமுர்த்தி அருணலு’ தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் சமுர்த்தி வதிவிடப் பொருளாதார, நுண் நிதிய, சுயதொழில் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி உதவியில் இடம்பெறுகின்ற இவ்வேலைத்திட்டம் கடந்த வியாழக்கிழமை யாழ். மாவட்டத்தில் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டது.

குறித்த திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு ஆடு, மாடு மற்றும் கோழி வளர்ப்புக்கான கொட்டில்கள், அரிசி ஆலை இயந்திரம், ஆடு உள்ளிட்ட வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

வாழ்வாதார உதவிகளை யாழ். அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் அங்கஜன் இராமநாதனின் பிரதிநிதிகள் பயனாளிகளிடம் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# 24 மணிநேரத்தில் தெற்கில் 1,292 பேருக்கு கொரோனா

காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் நேற்றுக் காலை வரையான 24 மணிநேரத்தில் ஆயிரத்து 292 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தென் மாகாண கொரோனா கட்டுப்பாட்டு மத்திய நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் சாமர மஹகமகே தெரவித்துள்ளார்.

அதற்கமைய, தென் மாகாணத்தில் இதுவரையில் இனங்காணப்பட்டுள்ள கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 41 ஆயிரத்து 848 வரையில் உயர்வடைந்துள்ளது.

அதற்கமைய, காலி மாவட்டத்தில் 594 பேருக்கும், மாத்தறை மாவட்டத்தில் 323பேருக்கும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 352 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.


கலை, இலக்கிய மற்றும் பல்சுவை அம்சங்களுடன்...




வார வெளியீட்டின் இலவச இணைப்பிதழாக

ஆப்கானிஸ்தானை கைப்பற்றிய தலிபான்கள் ஆட்சியமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அந்நாட்டிலிருந்து அமெரிக்கப் படையினர் வாபஸ் பெற்ற பிறகு எந்தவித எதிர்ப்பும் இல்லாது தலிபான்கள் அதிகாரத்தை தம்வசப்படுத்தினர்.

நாட்டில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் வகையில் ஆட்சியை கொண்டுசெல்லவுள்ளதாகவும் உலக நாடுகள் தமக்கு அங்கீகாரம் வழங்கவேண்டுமெனவும் தலிபான்கள் சார்பில் கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது. இந்நிலையில், தலிபான்கள் குறித்த தமது நிலைப்பாட்டை ஒருசில மேற்குலக நாடுகள் வெளிப்படையாக அறிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தானில் அதிகாரம்பெற்றிருக்கும் தலிபான்களை ஆதரிப் பதா இல்லையா என்பது குறித்து இலங்கை அரசாங்கம் இதுவரை தனது நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை.

ஆப்கானில் தலிபானின் அரசாங்கத்தை அவசரப்பட்டு இலங்கை அங்கீகரிக்கக்கூடாது என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆப்கான் மீண்டும் பயங்கரவாதத்தின் மையமாக மாறும் ஆபத்துள்ளதென தெரிவித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, காபூலிலுள்ள தூதரகத்தை இலங்கை மூடவேண்டும். ஆப்கானுக்கான பயணங்களை கட்டுப்படுத்தவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பமியான் புத்தரின் சிலையை அழித்தது தலிபான்களே என்பதை அவர் நினைவுபடுத்தியுள்ளார்.

அந்த பிராந்தியத்திலிருந்து அகற்றப்பட்ட பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கலாம் என்பதையும் ரணில் விக்கிரமசிங்க நினைவுபடுத்தி யுள்ளார்.

ஏற்கனவே உலகம் பெருந்தொற்றின் பிடியில் சிக்குண்டுள்ளதென தெரிவித்துள்ள முன்னாள் பிரதமர், தற்போது உலகம் இன்னொரு அச்சுறுத் தலை எதிர்கொள்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

தலிபான் ஆப்கானை ஆட்சிசெய்த காலத்திலேயே செப்டம்பர் 11 தாக்குதலுக்குக் காரணமான அல்கொய்தா உட்பட பல ஜிகாத் மற்றும் பயங்கரவாத அமைப்புகள் செயற்பட்டன எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய தலிபான் அரசாங்கத்தின்கீழ் ஆப்கான் மீண்டும் பயங்கரவாதி களும் ஜிகாத் தீவிரவாதிகளுக்குமான தளமாக மாறக்கூடும் என அனை

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஓகஸ்ட் 21ஆம் திகதி, சனிக்கிழமை

# தெளிவான நிலைப்பாட்டை இலங்கை எடுக்குமா?

வரும் கரிசனை கொண்டுள்ளனர் என குறிப்பிட்டுள்ள ரணில் விக்கி ரமசிங்க, உலக நாடுகளின் மீதான தாக்குதலையும் குரானை தவறாக அர்த்தப்படுத்தியவர்களையும் இலங்கை அங்கீகரிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக பாரம்பரிய இஸ்லாமிய நாடுகளுக்கும் ஏனைய நாடு களுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது தலிபான் அரசாங்கத்தை அங்கீகரிக்க வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு இல்லை எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

தலிபான்கள் சீன ஆதரவுப்போக்குடன் செயற்படுவதாக சர்வதேச நிபுணர்கள் பலர் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

அந்தக் கருத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் தலிபான்களின் பேச்சாளர் சுஹைல் ஷஹீன் சர்வதேச ஊடகமொன்றுக்கு நேற்று வெளியிட்ட கருத்து பேசப்படுகிறது.

"ஆப்கானிஸ்தானில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்து வதில் சீனா முக்கிய பங்காற்றியிருக்கிறது. எமது நாட்டை மீளக் கட்டி யெழுப்ப பங்களிப்பு வழங்குமாறு சீனாவை அழைக்கிறோம்" – என தலிபான்களின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், சீனா மிகப்பெரிய பொருளாதார வல்லமைகொண்ட நாடு. ஆப்கானிஸ்தானில் நல்லிணக்கம் மற்றும் புனரமைக்கு அந்நாட்டினால் மிகப் பாரியளவில் உதவ முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், தலிபான்கள் மத்தியில் சீனா எந்தளவுக்கு நன்மதிப்பைப் பெற்றிருக்கிறது என்பது புலனாகிறது.

சீனாவுடன் மிக நெருக்கமான தொடர்புகளைக்கொண்டிருப்பதன் காரணமாக தலிபான்களின் ஆட்சியை ஏற்றுக்கொள்ளாதிருப்பதிலுள்ள சிக்கல் குறித்து இலங்கை அரசாங்கம் சிந்திக்கிறதா என்ற கேள்வியும் எழுகிறது.

ஓர் ஆயுதப்படை, ஜனநாயக நீரோட்டத்தில் நாட்டை இட்டுச்செல்லும் என்ற எதிர்பார்ப்பை பெரும்பாலான உலக நாடுகள் கொண்டிருக்கவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானப் பணியாளர்களை வீடு வீடாகத் தேடிச்சென்று தலிபான்கள் சுட்டுக் கொலைசெய்வதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் தலிபான்களின் பக்கம் நிற்கும் நாடுகள் குறித்தும் அந்த நாடுகள் இவ்வாறான பயங்கரவாதச் செயற்பாடு களை ஆதரிக்கின்றனவா என்பது பற்றியும் சர்வதேச அரசியல் ஆய்வா ளர்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகிறது.

இந்நிலையில், இலங்கை அரசாங்கம் அமைதிகாக்காமல் ஆப்கானிஸ் தான் விடயத்தில் வெளிப்படையாக தனது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும். அந்த அறிவிப்பு இலங்கையின் மீது சர்வதேசத்தின் நன் மதிப்பை மேலும் வலுவூட்டுவதாக அமைவது உறுதிசெய்யப்படுதல் அவசியமாகும்.

பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்று இலங்கை இருந்துவிட முடியாது. முஸ்லிம்கள் தலிபான்களாக இருக்கிறார்கள் என் பதே தவிர, தலிபான்கள் இஸ்லாமிய கோட்பாடுகளை கடைப்பிடிக்கிறார் களா என்றால் அது கேள்விக்குரியது. எனவே, ஜனநாயகத்தின் உறுதிப் பட்டை கோடிட்டு காட்டுவதே அவசியம்.

# ஆப்கானிஸ்தானில் ஆட்சி அமைக்கப்போவது யார்?



ரமணி

உலகின் மிகப்பெரிய வல்லரசின் பிடியில் இருந்த ஆப்கானிஸ்தான் இப்போது தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. எதிரிகளை விரட்டிவிட்டோம் நமது நாடு நம் கையில் வந்துள்ளது என தலிபான்கள் வெற்றி முழக்கமிடுகின்றனர். இதுவரைகாலமும் ஆப்கானில் வாழ்ந்த மக்களின் முகத்தில் மகிழ்ச்சி இல்லை. அச்சத்துடனேயே வாழ்கின்றனர். வசதி உள்ளவர்கள் ஆப்கானை விட்டு வெளியேறிவிட்டனர். பலர் கால் நடையாக எல்லை தாண்டி அயல்நாடுகளுக்குச் சென்றுவிட்டனர். இன்னும் பலர் ஆப்கானை விட்டு வெளியேற முயற்சி செய்கின்றனர்.

ஆப்கானைக் கைப்பறிய தலிபான்கள் ஆட்சியமைப்பதற்கான பேச்சு வார்த்தைகளை நடத்துகின்றனர். ஆப்கானிஸ்தானின் விடுதலைக்காக ஆரம்பிக்கப்பட்ட மாணவர் அமைப்பான தலிபான், உலகமே பிரமிப்புடன் பார்க்கும் வகையில் வளர்ச்சியடைந்துள்ளது.

ஆப்கான் மக்கள் தலிபான்களை அச்சத்துடன் நோக்குகின்றனர். முன்பு அவர்கள் செய்த அட்டகாசங்களை மக்கள் மறக்கவில்லை. அச்சப்பட வேண்டாம் என தலிபான் தலைவர்கள் சொன்னாலும், மக்கள் அச்சத்துடனே இருக்கிறார்கள். ஊடகங்களுக்கு மக்கள் வழங்கும் பேட்டிகளில் இது



வெளிப்படையாகத் தெரிகிறது.

தலிபான்களுக்கு எதிராக ஆங்காங்கே ஆர்ப்பாட்டம் இடம் பெறுவதாகவும் தகவல்கள் வெளியாகின்றன. இப்படியான ஆர்ப்பாட்டங்களை தலிபான்கள் அனுமதிக்க மாட்டார்கள். அவர்களுடைய அனைத்து நோக்கமும் ஆட்சியமைப்பதிலேயே குறியாக உள்ளது. தலிபான் இயக்கத்தில் அங்கம் வகிக்காதவர்களையும் இணைத்து ஆட்சி அமைக்கப்போவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது எவ்வளவுக்கு சாத்தியமாகும் எனத் தெரியவில்லை. ஆனால், இவர்களின் கறாரான மதரீதியான ஆட்சி ஒரு நாட்டை ஆள்வதற்குத் தேவையான கொடுக்கல் வாங்கல் நெகிழ்வுத்தன்மையுடன் இருக்குமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது.

இஸ்லாமிய சட்டங்களுக்குள் என்ன அனுமதிக்கப்படுமோ அதுதான் என்கின்றனர், கலாசாரம், பொருளாதாரம், சமூகம் ஆகிய தாராளவாதங்கள் புழங்க வேண்டிய இடங்களிலும் இவர்களது மத அடிப்படைவாதம் தலைத்தூக்கினால் மற்ற நாடுகளுடனான உறவுகள், உள்நாட்டில் மக்கள் ஆதரவை எப்படி பெறுவார்கள் என்பது கேள்விக்குறியாகியுள்ளது. மக்களை சதாசர்வ காலமும் துப்பாக்கியின் கீழ், துப்பாக்கிமுனையில் வைத்திருக்க முடியாது, அப்படி வைக்க முயற்சி செய்தால் கிளர்ச்சி உருவாகும். கடந்த 20 வருடங்களில் அனுபவித்த வாழ்க்கை மாறுவதை ஆப்கான் மக்களில் அநேகமானோர் விரும்பமாட்டார்கள்.

ஆப்கானிஸ்தானில் பிரபலமானவர்கள் தலிபான்களுக்குப் பயந்து நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார்கள். ஆப்கானின் பிரபல பாடகியும் அவர்களில் அடக்கம். விமானச் சக்கரத்தில் சிக்கி உயிரிழந்தவர்களில் 19 வயதான



உதைபந்தாட்ட வீரரின் உடற்பாகங்கள் இருப்பதாக டோஹா செய்திகள் தெரிவிக்கின்றன. விமானத்திலிருந்து விழுந்து இறந்தவர் களில் ஒருவர் வைத்தியர் என உள்ளூர்வாசிகள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்காவுடன் 10 ஆண்டுகளாக காபூலிலும், டோஹாவிலும் தலிபான்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் அரசியல் பிரிவில் இரண்டாம் கட்ட தலைவரான முல்லா அப்துல் கனி பராதர் புதிய ஆட்சியின் தலைமைப் பீடத்தில் இருப்பார்.

தலிபான்களின் பெருந்தலைவர்களாகக் கருதப்படும் அமிர் உல் மொமினீன், மால்வி ஹைபத்துல்லா அக்குன்ஜாதா ஆகியோர் நேரடியாக அரசில் பங்கேற்க மாட்டார்கள். ஈரான் போன்று ஓர் அதிகாரம் மிக்க தலைவராக ஒருவர் நியமிக்கப்படுவார், அந்தப் பதவிக்கு மால்வி ஹைபத்துல்லா அக்குன்ஜதா நியமிக்கப்படுவார்.

முல்லா அப்துல் கனி பராதர் என்பவர் பொபல்ஜாய் பஷ்தூன் இனக்குழுவைச் சேர்ந்தவர். தலிபானின் இணை நிறுவனரும் இவரே. முல்லா முகமது உமருடன் இவர் சேர்ந்துதான் தலிபான் அமைப்பு தொடங்கப்பட்டது. பராதர் என்றால் சகோதரன் என்று பொருள். 2010இல் ஐ.எஸ்.ஐ. இவரைக் கைதுசெய்தது.

2018இல் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் தலிபான்கள் பேச்சுவார்த்தைகளை தொடங்கியபோது முல்லா அப்துல் கனி பராதர் விடுவிக்கப்பட்டார். 9 உறுப்பினர்களைக்கொண்ட தலிபான் குழுவின் தலைவர் இவர்தான். இந்தப் பேச்சு வார்த்தையின்போதுதான் அமெரிக்கப் படைகளை ஆப்கானிலிருந்து வாபஸ் பெற ஒப்புக்கொள்ளப்பட்டு ஒப்பந்தம் கையெழுத்தானது. அல்கொய்தா, ஐஎஸ், பயங்கரவாதிகளுக்கு புகலிடம் அளிக்கமாட்டோம் என்று தலிபான்கள் உறுதியளித்தனர். அந்த உறுதியை தலிபான்கள் காப்பாற்ற வேண்டும்.

முல்லா முகமது யாகூப் (வயது 31). இவர் முல்லா உமரின் மகனாவார். தலிபான்களின் இராணுவப் பிரிவின் தலைவராவார். ஆட்சிப்பீடத்தில் அடிபடும் இன்னொரு பெயர் முல்லா



கைருல்லா கைர்குவா, அடுத்தவ்ர் முல்லா முகமது ஃபசல். இவருக்கு வயது 54. அமெரிக்கப் படையினர் தலிபான்களை வெளியேற்றிய பிறகு குவந்தநாமோ பே சிறையில் இருவரும் அடைக்கப்பட்டனர். இவர்கள் பிறகு மே, 2014இல்தான் விடுவிக்கப்பட்டனர். இவர்களை அமெரிக்கா சும்மா விடுவிக்கவில்லை, ஹக்கானி நெட்வேர்க் அமைப்பு அமெரிக்க இராணுவ வீரர் பொவே பெர்க்தலை பிடித்து வைத்து மிரட்டியதையடுத்து இருவரும் விடுவிக்கப்பட்டனர். தலைமறைவாக உள்ள சிராஜுதீன் ஹக்கானி புதிய தலிபான்கள் ஆட்சியில் இடம்பெற விரும்புகிறாரா என்பது தெரியவில்லை.

ஹக்கானி நெட்வேர்க் தலிபான்களுடன் ஒருங்கிணைந்தவர்கள்தான் ஆனாலும் வேறுபட்ட நடவடிக்கைகள், அமைப்பு உறுப்புகள் கொண்டவர்கள். இவர்களுக்கு அல்கொய்தாவுடன் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற தாக்குதல்களில் ஹக்கானி நெட்வேர்க் வழிநடத்தியது.

இவர்களோடு ஷேர் முகமது அப்பாஸ் ஸ்டானிக்சாய், (இவர் டோகாவில் தலிபான்கள் அலுவலகத்தை நடத்தியவர்) மற்றொருவர் ஜபியுல்லா முஜாகிர் ஆகியோரும் முக்கியமானவர்கள். மேலும் ஹக்கானி சகோதரர் அனாஸ் என்பவரும் போட்டியில் உள்ளார்.

தலிபான் அரசை வழிநடத்தும் தலைவர்கள், அதன் கொள்கை, வெளிநாட்டு உறவு, வெளிநாட்டுத்தொடர்பு என்பனதான் ஆப்கானை உலகத்துடன் ஒன்றிணைக்கவுள்ளன.

## விட்டுக்கொடுப்பவர் கெட்டுப்போவதில்லை

### மகான் வேதாத்ரி மொழிந்தவை:



★ விட்டுக்கொடுத்து வாழுங்கள். பிறர் உங்களை வாழ்த்துவர்.

★ தடுமாற்றம், கோபம், கவலை, பேராசையால் நன்மை ஏற்படாது.

★ உணர்ச்சிகளில் மயங்காமல் விழிப்புடன் வாழுங்கள்.

★ பிறர் தவறு செய்த உடனேயே புத்தி சொல்லாதீர்.

★ உணவானது உடலில் மட்டுமே பாயும். ஆனால், எண்ணங்களோ எங்கும் பாயும்.

★ கணவன் - மனைவி இடையே விட்டுக்கொடுப்பவரே அறிவாளி.

★ பிறர் குற்றத்தை பெரிதுபடுத் தாதீர்.

★ நேர்மையாக இருந்தால் மகிழ்ச்சியாக வாழலாம்.

★ கவலையாக இருந்தால் அறிவும், உடல்நலமும் கெடும்.

★ விடாமுயற்சியும், கடின உழைப்பும் இருந்தால் வெற்றி உறுதி.

★ எண்ணத்தை தூய்மையாக வைத்திருப்பவனே அறிஞன்.

★ பிறரை குத்திக்காட்டுவதுபோல் அறிவுரை கூறாதீர்.

★ சிக்கல் இல்லாத மனிதன் யாரும் இல்லை.

★ அறியப்படுவது அறிவு. உணரப்படுவது ஞானம்.

★ காலம் தாழ்த்தாமல் கடமையைச் செய்யுங்கள்.

## மக்கள் கடிதம்

***வாசகர்களே ,***

***உங்கள் ஊரிலுள்ள குறைநிறைகளை, பிரச்சினைகளை எங்களுக்குத் தபால் மூலமாகவோ, மின்னஞ்சலினூடாகவோ எழுத்துமூலம் தெரிவியுங்கள்.***

***பிரதி சனிக்கிழமைகளில் எமது பத்திரிகையில் வெளிவரவுள்ள மக்கள் கடிதம் பகுதியில் அவற்றைப் பிரசுரிப்போம்.***

thamilaneditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது 0761393805 என்ற தொலைபேசி இலக்கத்தின் வட்ஸப்புக்கு அனுப்பலாம்.

# காணாமற்போனோருக்கான அலுவலகம் கிளிநொச்சியில் இரகசியமாக திறந்துவைப்பு

## ஜெனீவாவை எதிர்கொள்வதற்கான நாடகமென காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் அமைப்பின் செயலாளர் லீலாதேவி தெரிவிப்பு



கிளிநொச்சியில் கடந்த 12ஆம் திகதி மிகவும் இரகசியமாக திறக்கப்பட்ட காணாமற்போனோருக்கான அலுவலகம் எதிர்வரும் ஜெனீவாவை எதிர்கொள்வதற்கான ஒரு நாடகமே - என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் அமைப்பின் செயலாளர் ஆ.லீலாதேவி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தை நாம் தொடர்ச்சியாக எதிர்த்தே வந்துள்ளோம், இதனால் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளுக்குஎவ்வித நீதியும் கிடைக்கப் போவதில்லை. இதனை நாங்கள் அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளோம். சர்வதேசம் ஓஎம்பி மீது மெல்லிய நம்பிக்கை வைத்திருந்தது. எனவே, நாம் ஓஎம்பியின் உண்மை முகத்தை வெளிக்காட்டுவதற்காக 2019.07.20 அன்று பலத்த ஆதாரங்கள் உள்ள ஐந்து சம்பவங்களை ஓஎம்பி அலுவலகத்திற்கு வழங்கினோம். இதனை அப்போது தலைவராக இருந்த சாலிய பீரிஸும் ஏற்றுக்கொண்டு தீர்வை தருவதாக கூறியிருந்தார். ஆனால், இன்றுவரை அவற்றுக்கு தீர்வுகள் வழங்கப்படவில்லை. இதன்மூலம் இந்த ஓஎம்பி அலுவலகத்தினால் எதுவும் ஆகப்போதில்லை என்ற உண்மை அனைவருக்கும் தெரியவந்தது.

இந்நிலையில், தற்போது கொரோனா பரவல் காரணமாக ஒன்றுகூடவோ, எதிர்ப்பு போராட்டங்கள் நடத்தவோ முடியாதவாறு சட்டங்களையும், கட்டுப்பாடுகளையும் விதித்துவிட்டு இரகசியமாக கிளிநொச்சியில் ஓஎம்பி அலுவலகத்தை திறந்து செயற்பாடுகளை ஆரம்பித்திருப்பது எமக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. யாருக்காக இந்த அலுவலகம் உருவாக்கப்பட்டதோ அவர்கள் எவருக்கும் தெரியாது. இதனை கிளிநொச்சியில் இரகசியமாக மேற்கொண்டமைக்கான காரணம் என்ன? சர்வதேசத்தையும், ஜெனீவாவையும் எதிர்கொள்வதற்காக அரசு போடும் நாடகமே இது.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பாகிய நாம் எட்டு மாவட்டங்களின் உறவினர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்கள். எனவே, நாம் கிளிநொச்சியில் இரகசியமாக ஆரம்பிக்கப்பட்ட ஓஎம்பி ஆலுவலகத்தை எதிர்க்கின்றோம். இச்செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கின்றோம் - என்றார்.

# பாதையை கடக்க முற்பட்டவர் மீது முச்சக்கரவண்டி மோதி விபத்து

## இரண்டு பிள்ளைகளின் தந்தை உயிரிழப்பு



(எம்.கிருஸ்ணா)

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர். ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடாகம பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் குடாகம பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான செல்வராஜ் விஜயவீரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கொட்டகலை பகுதியிலிருந்து ஹட்டன் நோக்கி வந்த முச்சக்கரவண்டி, பாதையை கடக்க முற்பட்டவர் மீது மோதுண்டே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதுடன், விபத்துக்குள்ளானவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்கையிலேயே உயிரிழந்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான முச்சக்கரவண்டியின் சாரதி ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் ஆஜராகியுள்ளார்.

சடலம் கொட்டகலை ஆதார வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பஸ் – கனரக வாகனம் மோதி விபத்து இரு வாகனச் சாரதிகளும் படுகாயம்

## தலவாக்கலை – ஹட்டன் வீதியில் சம்பவம்



(க.கிஷாந்தன், பி.கேதீஸ்)

தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தலவாக்கலை - ஹட்டன் பிரதான வீதியில் தலவாக்கலை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்றுக் காலை 7 மணியளவில் பஸ்ஸொன்றும் கனரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு ஊழியர்களை ஏற்றிச்செல்ல சென்ற தலவாக்கலை சென்கிளயர் பகுதியை நோக்கிச் சென்ற பஸ் ஒன்றும் ஹட்டன் பகுதியிலிருந்து நுவரெலியா பகுதிக்குச் சென்ற கனரக வாகனம் ஒன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் லொறியின் சாரதியும், பஸ்ஸின் சாரதியும் படுகாயமடைந்துள்ளனர். இந்த விபத்து காரணமாக சுமார் 30 நிமிடங்கள் வரை ஹட்டன் - நுவரெலியா வீதி ஊடான போக்குவரத்து பாதிப்புக்குள்ளாகியது.

குறித்த கனரக வாகனச் சாரதியினால் வேகத்தை கட்டுப்படுத்த முடியாதுபோனதால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னாரில் டெல்ட்டா தொற்று தாக்கம் செலுத்துவதை தவிர்த்துக்கொள்ளும் வகையில் மக்கள் செயற்பட வேண்டும்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வினோதன்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மக்கள் தற்போது சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிப்பதில் முன்னேற்றம் காணப்பட்டாலும், இதனையும் விட கூடுதலான அளவில் மிகக் கடுமையாக சுகாதார வழிமுறைகளை கடைப்பிடித்து தற்போது நாடுமுழுவதும் பரவியுள்ள டெல்ட்டா தொற்று மன்னாரிலும் தாக்கம் செலுத்துவதை தவிர்த்துக்கொள்ளும் வகையில் மக்கள் செயற்பட வேண்டும் - என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் நேற்று முன்தினம் மாலை வரை கொரோனா தடுப்பூசியின் முதலாவது தடுப்பூசி 59 ஆயிரத்து 126 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது. இவர்களில் ஆயிரத்து 300 பேர் கர்ப்பிணிகளாக உள்ளனர்.

இதேவேளை, 2ஆவது தடுப்பூசி நேற்று முன்தினம் மாலை வரை 47 ஆயிரத்து 406 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது.

இந்த மாதம் தற்போதுவரை 327 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதுவே ஒரு மாதத்தில் இதுவரை மன்னாரில் அடையாளம் காணப்பட்டுள்ள அதிகூடிய எண்ணிக்கையுடைய நோயாளிகளின் தொகையாகும்.



புத்தாண்டு கொத்தணியுடன் தொடர்புடைய ஆயிரத்து16 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் மன்னாரில் மொத்தமாக ஆயிரத்து368 பேரும் இவ்வருடம் மாத்திரம் ஆயிரத்து351 பேரும் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் மொத்தம் ஆயிரத்து 500 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு மொத்தம் 27 ஆயிரத்து 400 வரையிலான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 0.86 விதமாக காணப்படும் மரண வீதம் உயர்வடைந்து தற்போது 0.96 வீதமாக காணப்படுகின்றது.

நாட்டில் இடம்பெற்றுவரும் கொரோனா மரண வீதத்துடன் ஒப்பிடும்போது குறைவாக காணப்பட்டாலும், எமது மரண வீதம் அதிகரித்துச் செல்வதை காட்டுகிறது. எனவே, மக்கள் மிகவும் அவதானத்துடன், சுகாதார கட்டுப்பாடுகளை கடைப்பிடித்து நடந்துகொள்ள வேண்டும்.

நோய் அறிகுறிகள் காணப்படுபவர்கள் வீடுகளில் தனித்திருக்காமல் உடனடியாக வைத்திய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

தற்போது கொரோனா தொற்றாளர்களுக்கு வீடுகளில் வைத்து சிகிச்சை வழங்கப்படுவதினால் பொதுமக்கள் எவ்வித அச்சமுமின்றி நோய் அறிகுறிகள் காணப்பட்டால் அருகிலுள்ள வைத்தியசாலை, சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோருக்கு அறிவித்து தங்களுக்கான சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

மன்னார் மக்கள் தற்போது சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிப்பதில் முன்னேற்றம் காணப்பட்டாலும், இதனையும் விட கூடுதலான அளவில் மிகக் கடுமையாக சுகாதார வழிமுறைகளை கடைப்பிடித்து தற்போது நாடு முழுவதும் பரவுகின்ற டெல்ட்டா தொற்று மன்னாரிலும் தாக்கம் செலுத்துவதை தவிர்த்துக்கொள்ளும் வகையில் மக்கள் செயற்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

# வவுனியாவில் கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு செல்ல மறுத்த ஹோட்டல் உரிமையாளர் கைது

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில் கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு செல்ல மறுத்து, சுகாதாரப் பிரிவினரின் நடவடிக்கைக்கு இடையூறை ஏற்படுத்திய ஹோட்டல் உரிமையாளர் நீதிமன்ற கட்டளைக்கமைவாக நேற்று முன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, சின்னப்புதுக்குளம் பகுதியில் ஹோட்டல் நடத்திவரும் அதன் உரிமையாளருக்கு (வயது 59) கடந்த 11ஆம் திகதி கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டது. இதனையடுத்து அவரை கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு கொண்டுசெல்ல முற்பட்டபோது அவர் அதற்கு மறுப்பு தெரிவித்திருந்தார்.

அவரது உடல்நிலை தொடர்பில் பரிசோதனை செய்த சுகாதாரப் பிரிவினர், அவர் கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு செல்லவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர். இருப்பினும், அவர் கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு செல்ல மறுப்பு தெரிவித்ததுடன், அவருடன் தொடர்புகளைப் பேணியவர்களை அறிவதற்காக ஹோட்டல் சிசிரிவி பதிவுகளை சுகாதாரப் பிரிவினர் கோரியபோது அதனையும் காட்ட மறுத்திருந்தார். அத்துடன், சுகாதாரப் பிரிவினருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடொன்றையும் ஒன்லைன் மூலம் பதிவுசெய்திருந்தார்.

இந்நிலையில், சுகாதாரப் பிரிவினரின் நடவடிக்கைக்கு இடையூறை ஏற்படுத்தியதாக சுகாதாரப் பிரிவினர் வவுனியா பொலிஸில் ஹோட்டல் உரிமையாளருக்கு எதிராக முறைப்பாடு பதிவுசெய்து, பொலிஸார் ஊடாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர்.

இந்நிலையில், குறித்த முறைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்திய நீதிமன்றம் குறித்த நபரை கைதுசெய்து கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவு பிறப்பித்ததுடன், சிசிரிவி பதிவுகளையும் சுகாதாரப் பிரிவினருக்கு காட்டுமாறு தெரிவித்திருந்தது.

இதனையடுத்து குறித்த ஹோட்டலுக்குச் சென்ற வவுனியா பொலிஸார், ஹோட்டல் உரிமையாளரை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கைதுசெய்து, சுகாதாரப் பிரிவினர் ஊடாக வவுனியா வைத்தியசாலையின் கொவிட் சிகிச்சை நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இதேவேளை, நீதிமன்ற கட்டளைக்கமைவாக கைதுசெய்ய பொலிஸார் சென்றபோது அவர் உடன் வர மறுப்பு தெரிவித்து, தனது சட்டத்தரணி வரவேண்டும் என தெரிவித்ததுடன், சட்டத்தரணி ஒருவர் வந்த பின்னரும் நீண்ட இழுபறியின் பின்னரே அம்பியூலன்ஸில் ஏறியிருந்தார்.

இதன்காரணமாக சுகாதாரப் பிரிவினரும், பொலிஸாரும் குறித்த ஹோட்டல் முன்பாக நீதிமன்ற கட்டளையுடன் சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 168 கிலோ கேரள கஞ்சாவுடன் மூவர் கைது!




கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் கஞ்சா போதைப்பொருள் கடத்தி வரப்பட்டபோது வடமராட்சி - தொண்டைமானாறு கடற்பரப்பில் வைத்து மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 168 கிலோ கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட படகுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

செம்பியன்பற்று பகுதியைச் சேர்ந்த ஒருவரும் மன்னார் சிலாவத்தை பகுதியைச் சேர்ந்த இருவரும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# வவுனியாவில் சிறப்பாக இடம்பெற்ற வரலட்சுமி பூஜை வழிபாடுகள்





(வவுனியா நிருபர் )

வவுனியாவில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வரலட்சுமி பூஜை வழிபாடுகள் நேற்று சிறப்பாக இடம்பெற்றன.

இந்துக்களின் விசேட விரதங்களில் வரலட்சுமி விரதமும் ஒன்றாகும். சுமங்கலிப் பெண்கள் தமது கணவன்மாருக்கு நீண்ட ஆயுள் வேண்டியும், அவர்களுக்கு நலம் வேண்டியும் வரலட்சுமி விரத நாளில் அம்மனிடம் வரம் வேண்டி விரதமிருந்து நூல் கட்டுவர்.

அந்தவகையில் வவுனியாவிலுள்ள அம்மன் ஆலயங்கள் மற்றும் இந்து ஆலயங்களில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பக்தர்களுடன் வரலட்சுமி பூஜை விசேட வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன.



வவுனியா, குட்செட் வீதி கருமாரி அம்மன் தேவஸ்தானத்தில் ஆலயத்தின் பிரதம குரு பிரபாகரக்குருக்கள் தலைமையில் கருமாரி அம்மனுக்கு விசேட அபிஷேகம், பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வரலட்சுமி விரத வழிபாடுகள் இடம்பெற்றன.

இதன்போது விரதமிருந்தவர்களுக்கு அம்மன் ஆசியுடன் நூல் கட்டும் நிகழ்வும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்றது.

# மன்னார் அரச அதிபரின் அவசர கோரிக்கை



(மன்னார் நகர் நிருபர்)

மன்னாரிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் திருப்பலிகளை நடத்தாதிருக்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாக மன்னார் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்துவரும் நிலையில் அரசு மற்றும் சுகாதாரத்துறையினர் இறுக்கமாக சுகாதார நடைமுறைகளை அமுல்படுத்தியுள்ளனர்.

அதற்கமைவாக மத ஸ்தலங்களில் எவ்வித கூட்டுப் பிரார்த்தனைகளையும் மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மன்னாரிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் திருப்பலிகளை மேற்கொள்ள தடை விதிக்குமாறு கோரி மன்னார் மறைமாவட்ட ஆயரின் கவனத்திற்கு கொண்டுசென்றுள்ள நிலையில், திருப்பலிகள் மற்றும் வழிபாடுகள் அனைத்தும் நிறுத்த ஆயர், பங்குத் தந்தையருக்கு அறிவித்துள்ளார்.

மேலும் இந்து மற்றும் இஸ்லாமிய மத ஸ்தலங்களிலும் மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்க்க உரிய தரப்பினரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளேன். அனைவரதும் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் பட்சத்தில் மன்னாரை கொரோனா தொற்றிலிருந்து முழுமையாக பாதுகாத்துக்கொள்ள முடியும்.

இதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் – என்றார்.

# அம்பாறை மாவட்ட வீதிகளில் நெல் உலரவிடுவதால் போக்குவரத்துக்கு இடையூறு

## விவசாயிகளுக்கு வசதியை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை





(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் தற்போது மீண்டும் அடைமழை பெய்து வருவதனால் அறுவடை செய்யப்பட்ட நெல்லை பிரதான வீதிகள், உள்ளக வீதிகளில் உலரவிடுவதனால் போக்குவரத்து சீர்கேடு ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

இச்செயற்பாடானது அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, சொறிக்கல்முனை, சவளக்கடை, மத்திய முகாம் ஆகிய பிரதேசங்களிலுள்ள பிரதான வீதிகள் உள்ளக வீதிகளில் இச்செயற்பாடு தொடர்கதையாகவே உள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையின் அறுவடை தற்போது மும்முரமாக நடைபெற்றுவருகின்ற நிலையில், அறுவடைசெய்யப்பட்ட நெல்லை சந்தைப்படுத்துவதற்காக விவசாயிகள் தமது ஈரப்பதமான நெற்களை உலரவிடுவதற்காக இச்சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர்.

போதியளவு நெல் உலரவிடும் தளமின்மையால் வீதியில் தாம் இவ்வாறு உலரவிடுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மூடை மூடைகளாக வீதிகளில் நெற்களை குவித்து உலர விடுவதனால் வீதியில் விபத்துச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு உலரவிடும் நெற்கள் ஒருபக்க வீதியை தடைசெய்து உலரவிடுவதனால் இரு போக்குவரத்து வீதிகளும் தடைப்படுவதுடன் வீண் விபத்துகள் ஏற்படுவதற்கும் காரணமாக உள்ளது.

தனிப்பட்ட சுயலாபத்திற்கான இவ்வாறான வீதிகளை பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும் என பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்வாறு சட்டவிரோதமாக வீதிகளில் நெல்லை உலரவிடுபவர்களுக்கு எதிராக பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

# ஓட்டமாவடியில் இதுவரை 1875 உடல்கள் அடக்கம்

(கல்குடா நிருபர்)

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சூடுபத்தினசேனையில் நேற்று முன்தினம் வரைக்கும் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் 1875 உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் உடல்கள் ஓட்டமாவடி பிரதேசத்தில் அடக்கம்செய்யும் நிலையில், அதனை பார்வையிட்டு நிலைமைகள் தொடர்பில் ஆராயும் வகையில் கிண்ணியா பிரதேச செயலாளர் மற்றும் சபை தவிசாளர் அடங்கலான குழுவினருடன் ஓட்டமாவடி பிரதேச சபையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் மேற்சொன்னவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஓட்டமாவடி சூடுபத்தினசேனையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம்செய்யும் பணி ஓட்டமாவடி பிரதேச சபையினால் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடந்த மார்ச் மாதம் ஐந்தாம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதிவரைக்கும் அனைத்து சமூகங்களின் உடல்களும் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன. அந்தவகையில் நேற்று முன்தினம் வரைக்கும் 1875 உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், இதில் 1737 முஸ்லிம்களின் உடல்களும், 66 இந்துக்கள், 31 கிறிஸ்தவர்கள், 41 பௌத்தம் ஆகிய தேசிய ரீதியில் மரணித்தவர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

ஓட்டமாவடி சூடுபத்தினசேனையில் உடல்களை அடக்கம்செய்வதில் இடப்பற்றாக்குறை



காணப்பட்டு வரும் நிலையில், வேறொரு இடத்தை அடையாளப்படுத்த வேண்டும் என்று பிரதேச சபை மற்றும் ஓட்டமாவடி பிரதேச சமூகமட்ட அமைப்புகளாலும் வேண்டுகோள் விடுத்த நிலையில் அரசாங்கம், பாதுகாப்புத் தரப்பில் எடுத்துக்கொண்ட முயற்சியின் அடிப்படையில் கிண்ணியாவில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம்செய்ய இடம் அடையாளப்படுத்தப்பட்ட நிலையில், இதனை உறுதிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மஜ்மா நகரில் கொரோனாவினால் மரணமடைவர்களின் உடல்கள் அடக்கம்செய்யும் வேலைத் திட்டங்கள், எதிர்நோக்கும் சவால்கள் பற்றி அறிந்துகொள்ளும் வகையில் கிண்ணியா பிரதேச சபை தவிசாளர், பிரதேச செயலாளர் உள்ளிட்ட குழுவினர் விஜயம் செய்து கலந்துரையாடலை சபையில் மேற்கொண்டு உடல்கள் அடக்கம்செய்யும் இடத்திற்கு சென்று பார்வையிட்டு அடக்கம்செய்யும் முறைமைகள் பற்றியும் அறிந்துகொண்டனர்.

கிண்ணியாவில் அடையாளப்படுத்தப்பட்ட இடத்தில் தேசிய ரீதியில் மரணித்தவர்களின் உடல்கள் அடக்கம்செய்ய அனுமதி கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் - என ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம்செய்ய கிண்ணியாவில் அடையாளப்படுத்தப்பட்ட இடத்திற்கு அனுமதி கிடைக்கப்பெறும் தறுவாயில் உள்ளது என கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் காசுதீன் முஹம்மது நிஹார் தெரிவித்தார்.

இதன் நிமித்தம் நாங்கள் ஓட்டமாவடி பிரதேச சபைக்கு வருகை தந்து உடல்களை அடக்கம் செய்யும் முறைகள் மற்றும் கையாளும் விதங்கள் பற்றி கலந்துரையாடியதுடன், உடல்கள் அடக்கம் செய்யும் இடங்களும் சென்று அடக்கம் செய்யும் பணியில் உள்ளவர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டோம்.

எனவே, எங்களுக்கு உடல்களை கிண்ணியா பிரதேசத்தில் அடக்கம்செய்ய அனுமதி கிடைக்கும் பட்சத்தில் உடல்களை அடக்கும் பணியை திறம்பட மேற்கொள்வோம் - என்று கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் காசுதீன் முஹம்மது நிஹார் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கொரோனா விடயத்தில் அரசின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள்

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. சாடல்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கொரோனாவிலிருந்து அரசு மக்களைப் பாதுகாக்கும் என்ற விடயத்தில் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். இதனால் தாமே சில முடிவுகளை எடுத்துவருகின்றனர் - என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சக்தி தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.


அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கொரோனா நாடுமுழுவதும் வேகமாகப் பரவி வருகின்றது. நாளாந்தம் தொற்றுக் குள்ளாவோர் எண்ணிக்கையும் மரணமடைவோர் எண்ணிக்கையும் மிக அதிகரித்து வருகின்றது. வைத்தியசாலைகளில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மக்கள் வைத்திய வசதிக்காக அல்லல்படுகின்றனர்.

இதனைக் கவனத்திற்கொண்டு வைத்தியர்களும் ஏனைய சுகாதாரப் பகுதியினரும் சில நாட்களுக்காவது நாட்டை முடக்கவேண்டும். அதன்மூலம் கொரோனா தொற்றையும் கொரோனா மரணங்களையும் குறைக்கமுடியும் என்று அரசிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதேபோல் அரசியல் தலைவர்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

எனினும், இவைகளை அரசு காதில் போட்டுக்கொள்ளவில்லை. கொரோனாவைக் கட்டுப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவும் இல்லை. அதற்கான திட்டங்களும் அரசிடம் இல்லை. இதுவே கொரோனா தொற்று அதிகரிப்புக்கும் கொரோனா மரண அதிகரிப்புக்கும் காரணமாகும்.

எனவே, இந்த அரசு மக்களைப் பாதுகாக்கும் விடயத்தில் மிகவும் பலவீனமாக உள்ளது



என்பதை உணர்ந்த மக்கள் அரசில் நம்பிக்கை இழந்துவிட்டனர். இதனால் ஆங்காங்கே பிரதேச ரீதியாக மக்கள் ஒன்றிணைந்து தத்தமது பகுதிகளில் சுய முடக்கத்தை பிரகடனப்படுத்தி வருகின்றனர்.

இதேபோல் பல்வேறு தொழிற்சங்கங்களும் நாடு தழுவிய முடக்கத்தை முன்னெடுக்க தயாராகி வருகின்றன. அரசு செய்யவேண்டிய விடயத்தை நேற்று மக்கள் செய்யுமளவுக்கு இந்த அரசாங்கம் மிகவும் பலவீனப்பட்டுவிட்டது.

நாட்டை நிர்வகிக்கும் இந்த அரசியல் தலைமைகளின் குடும்பத்தில் யாரும் கொரோனாவினால் பாதிக்கப்படவில்லை; மரணமடையவில்லை. இதனால் அவர்களுக்கு கொரோனாவினால் பாதிக்கப்பட்ட மற்றும் மரணமடைந்த குடும்பங்களின் துயரங்களை உணர்ந்துகொள்ள முடியவில்லை. இதுவே இன்றைய பிரதான பிரச்சினைக்கு காரணமாகும்.

அரசாங்கத்தின் இந்த அசமந்த நிலை குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன். உங்களை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்று மக்களைக் கைவிட்ட அரசாங்கமாகவே இதனைப் பார்க்கவேண்டியுள்ளது. எனவே, பொதுமக்கள் இந்த அரசாங்கத்தை நம்பியிராது தங்களைத் தாமே பாதுகாத்துக்கொள்ளத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

# குச்சவெளி பிரதேச வர்த்தக நிலையங்களுக்கும் பூட்டு



(சீனக்குடா நிருபர்)

அதிகரித்துவரும் கொரோனா வைரஸிலிருந்து பாதுகாப்பு பெறும் நோக்கில் நேற்று (20) முதல் இருவாரங்களுக்கு குச்சவெளி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.முபாரக் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

உப்புவெளி சுகாதாரப் பிரிவில் சடுதியாக அதிகரித்துவரும் கொரோனாவை கட்டுப்படுத்துவதற்காக, சுகாதாரப் பிரிவினர்களோடு மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. எனவே, பொதுமக்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். எந்தவிதமான பொறுப்புமின்றி வெளியிடங்களில் நடமாடுவதை முழுமையாக குறைத்துக்கொள்ள வேண்டும்.

சுகாதாரப் பிரிவில் பலபேர் மக்களைக் காப்பாற்ற போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் சிலர் கொவிட் தொற்றுக்கு இலக்காகி சிகிச்சைபெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலை ஆபத்தான கட்டமாகும்.

இந்த விபரீதத்தை உணர்ந்துகொண்டு எங்கள் பிரதேசங்களை நாங்களாகவே முடக்கிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது.

இந்நிலையில், வர்த்தக சங்கங்கள், உள்ளூராட்சி சபைகள், கோவில்கள், பள்ளிவாசல்கள் ஆகிய சமூக அமைப்புகள் இது குறித்து மக்களுக்கு அடிக்கடி விழிப்பூட்டும் செயற்பாடுகளில் இறங்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

# தம்பலகாமம் பிரதேச சபைக்கு புதிய செயலாளர் நியமனம்



(கந்தளாய் நிருபர்)

தம்பலகாமம் பிரதேச சபையின் புதிய செயலாளராக எஸ்.என்.எம்.நிஜாம் நேற்று முன்தினம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தம்பலகாமம் சபையின் தவிசாளர் ஏ.ஜீ.சம்பிக பண்டார முன்னிலையில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

கிண்ணியா நகர சபையில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றிய இவர், தம்பலகாமம் பிரதேச சபையில் நிலவிய செயலாளர் வெற்றிடத்திற்காக உள்ளூராட்சி ஆணையாளரினால் நியமிக்கப்பட்டார்.

# கண்பார்வை குறைபாடுடைய சிறுவனின் சத்திரசிகிச்சைக்கான நிதியுதவி வழங்கிவைப்பு



(மட்டக்களப்பு விசேட நிருபர்)

ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மாவடிவேம்பு பகுதியைச் சேர்ந்த மிகவும் வறுமை நிலையிலுள்ள 12 வயதையுடைய செல்வராசா சோபேஸ்நாத்தின் கண்பார்வை குறைபாட்டை சத்திரசிகிச்சை மூலம் நிவர்த்திசெய்வதற்கு தேவையான நிதி நேற்று திகதி மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனினால் வழங்கப்பட்டுள்ளது.

தனது 9ஆவது வயதில் கண்பார்வை குறைபாட்டை எதிர்நோக்கிய தரம் 7இல் மாவடிவேம்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி பயின்றுவரும் குறித்த சிறுவனின் கண்பார்வைக்கான சத்திரசிகிச்சைக்கான நிதி தேவையேற்பட்டபோது, விடயத்தை அறிந்துகொண்ட அவுஸ்திரேலியாவில் வசித்துவரும் முன்னால் சிறுவர் பாதுகாப்பு மாவட்ட இணைப்பாளர் அ.கோடீஸ்வரனும் அவரது நண்பர்களும் இணைந்து 3 இலட்சத்து 6 ஆயிரம் ரூபா நிதி உதவியை அனுப்பிவைத்துள்ளனர்.

முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர் வீ.முரளிதரனின் ஒருங்கிணைப்பில் வழங்கப்பட்ட இக்கொடுப்பனவின் மூலம் சிறுவனின் சத்திரசிகிச்சையை மேற்கொள்வதுடன், அவர்களின் குடும்ப வாழ்வாதாரம் மற்றும் கல்வி வளர்ச்சிக்காக இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் அ.நவேஸ்வரன் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

# நுகர்வோர் அதிகாரசபையினால் திடீர் சுற்றிவளைப்பு


(எம்.என்.எம்.அப்ராஸ்)


அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினால் கல்முனை மாநகர எல்லையினுள் உள்ள பல வர்த்தக நிலையங்கள்மீது திடீர் சுற்றிவளைப்பு நேற்று மேற்கொள்ளப்பட்டது.

பொருட்களை விற்பனைசெய்யும்போது நுகர்வோருக்கு நிபந்தனை விதிப்பது, மேலதிக கட்டணங்கள் அறவிடுவது, பொருட்களை பதுக்கிவைப்பது தொடர்பான பொதுமக்களினால் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதையடுத்து, அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகாரசபையினரால் குறித்த தீடீர் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வியாபார நிலையங்களுக்கு எச்சரிக்கை அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், மேலும் பல வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

# மட்டு. மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற வரலட்சுமி பூஜை





(மட்டக்களப்பு மேலதிக நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் விசேட வரலெட்சுமி பூசை நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ உத்தம ஜெயதீஸ்வர சர்மா குருக்களின் தலைமையில் சிறப்பு வரலட்சுமி பூசை நிகழ்வானது விசேட தீபாராதனையுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

பௌர்ணமிக்கு முன்வருகின்ற வெள்ளிக்கிழமை வரும் இவ்விரதமானது சிவபெருமானே ஆணையிட்டு உமையம்மையார் உலகத்தின் நன்மை மற்றும் சௌபாக்கியத்தின் பொருட்டு கடைப்பிடித்துக் காட்டியதன் பயனாலேயே முருகப்பெருமான் அவதரித்ததாகவும், இவரது அவதாரத்தினால் துன்பங்கள் எப்படி நீங்கியதோ அதேபோன்று வரலட்சுமி விரதத்தை நாம் அனுஷ்டிப்பதால் எம்மிடம் இருக்கின்ற தீமைகள் எல்லாம் நீங்கி சௌபாக்கியம் பிறந்திடும் என்றும் புராணங்கள் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பூஜை நிகழ்வுகளில் உபயகாரர்களான உள்ளக கணக்காய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்கள், தகவல் திணைக்கள பிரிவு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட மாவட்ட செயலக அலுவலக உத்தியோகத்தர்கள் சிலரும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கலந்துகொண்டு பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

# கிண்ணியாவில் 36 பேரிடம் மேற்கொண்ட அன்ரிஜன் பரிசோதனையில் 14 பேருக்கு தொற்று



(சீனக்குடா நிருபர்)

தற்போது நாடளாவிய ரீதியில் கொரோனா தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கையும் மரணங்களும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்ற நிலையில், கிண்ணியா பிரதேசத்திலும் கொரோனா நோயாளர் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டு வருவது கவலைக்குரிய விடயமாகும் - என பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.றிஸ்வி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எமது சுகாதார அலுவலகத்தால் நேற்று முன்தினம் 36 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 14 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதில் இடிமண் கிராமசேவகர் பிரிவில் 11 பேரும் குறிஞ்சாக்கேணி பகுதியைச் சேர்ந்த இருவரும் வங்கி ஊழியர் ஒருவரும் அடங்குகின்றனர்.

தொற்றாளர்கள் அதிகரித்துவரும் இக்காலகட்டத்தில் வைத்தியசாலைகளில் ஒட்சிசன் தட்டுப்பாடு வரக்கூடிய அபாயநிலைமை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

எனவே, இனிமேலாவது நாம் அனைவரும் எமது அலட்சியப்போக்கை விடுத்து அத்தியாவசிய தேவைக்காக மாத்திரம் சுகாதார விதிமுறைகளுடன் வெளியில் நடமாடுவதன் மூலமும் ஏனைய நேரங்களில் வீட்டிலிருந்து பாதுகாப்பு பெறுவதன் மூலமும் கொடிய கொரோனா மரண அபாயத்திலிருந்து எங்களை நாங்களே பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு தனிநபரும் பொறுப்புணர்ந்து நடந்துகொள்வதால் மாத்திரமே கொரோனா தொற்றை இல்லாதொழிக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

# மூன்று நாட்களாக மருத்துவசேவை இடம்பெறாத பனங்காடு வைத்தியசாலை – நோயாளர்கள் சிரமம்

(வி.சுகிர்தகுமார்)

அக்கரைப்பற்று பனங்காடு பிரதேச வைத்தியசாலையில் கடந்த மூன்று நாட்களாக வைத்திய சேவை வழங்கப்படாத நிலையில் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் பெருங்கவலையடைந்துள்ள நோயாளர்களும் பொதுமக்களும் வைத்தியசாலையை திறந்து மக்களுக்கான வைத்திய சேவை இடம்பெற உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

இதனிடையே வைத்தியசாலையின் முன்பாக ஒன்றுசேர்ந்த பனங்காடு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் ஆர்.சுவர்ணராஜ் தலைமையிலான சிலர், வைத்தியசாலையை திறப்பதற்குரிய நடவடிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் மேற்கொள்ளவேண்டும் என ஊடகங்கள் முன் கோரிக்கை முன்வைத்தனர்.

குறித்த வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியர் யு.எல்.எம்.சகீல் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் பொதுமகன் ஒருவரால் தாக்கப்பட்டதையடுத்து பாதுகாப்பின்மை காரணமாக அவர் பணியிலிருந்து விலகிக்கொண்டார்.

இந்நிலையில், வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரும் ஊழியர்களும் மேற்கொண்ட






உரிய நடவடிக்கை காரணமாக குறித்த நபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டார்.

எவ்வாறாயினும் தாமும் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் வாழும் பொதுமக்களும் சம்பவம் தொடர்பில் கவலையடைந்துள்ளதுடன், சம்பவத்திற்கு எதிராக கடும் கண்டத்தை தெரிவிப்பதாகவும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் கூறினர்.

இதேநேரம் சட்டம் தன் கடமையை செய்யும் எனும் நம்பிக்கையில் உள்ளதாகவும் கூறுகின்றனர். மேலும், வைத்தியசாலை ஊழியர்களுக்கான பாதுகாப்பை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டனர். கொரோனா அச்சுறுத்தல் நிலவும் இக்காலத்தில் சம்பவத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ய முடியாதுள்ளதாகவும் கூறுகின்றனர்.

இதனிடையே குறித்த வைத்தியசாலையில் தமக்கு உரிய பாதுகாப்பு இல்லை என தெரிவித்தும் இன்றும் வைத்தியர் வைத்தியசாலைக்கு சமூகமளிக்காத நிலையில் வைத்தியசாலையும் மூடப்பட்டுள்ளது.

இதனால் சிகிச்சைக்காக அங்கு கைக்குழந்தைகளுடனும் நோயுடனும் தூரப்பிரதேசங்களில் இருந்து சென்ற பலர் நேற்று ஏமாற்றதுடன் வீடு திரும்பினர்.

எவ்வாறாயினும் பொதுமக்களுக்கான வைத்திய சேவை இடம்பெறாத நிலையில், சுமார் 15இற்கும் மேற்பட்ட கிராம மக்கள் பாதிப்படைந்துள்ளனர். ஆகவே, இதுதொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணன் உள்ளிட்ட சுகாதாரத்துறை அதிகாரிகள் கவனமெடுத்து மக்களுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும் என இதன்மூலம் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு கொரோனா; பெரியகல்லாறு இலங்கை வங்கிக்கு பூட்டு

(பாண்டிருப்பு நிருபர்)

பெரியகல்லாறு பகுதியில் அமைந்துள்ள அரச வங்கிகளில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களுக்கு நேற்று அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது இலங்கை வங்கியில் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமைபுரியும் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதன்காரணமாக வங்கி நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 04ஆம் திகதிவரை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட கிராமங்களில் அமைந்துள்ள அரச அரசசார்பற்ற நிறுவனங்களில் கடமைபுரியும் உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு கொரோனா தொற்றைக் கண்டறிவதற்கான அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய நேற்று பெரியகல்லாறு கிராமத்திலுள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றில் கடமைபுரியும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் 15 பேருக்கு எழுமாற்றாக அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது அதில் இலங்கை வங்கியில் கடமைபுரியும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்தார்.

இவ்வங்கியில் கடமைபுரியும் கல்முனையைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் நேற்று முன்தினம் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்தார். இந்நிலையில், அங்கு மேலும் ஒருவர் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

பெரியகல்லாற்றில் அமைந்துள்ள தேசிய சேமிப்பு வங்கியில் கடமைபுரியும் முகாமையாளர் ஒருவர் கடந்தவாரம் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்தார். இதனையடுத்து அவ்வங்கியின் நடவ டிக்கைகளும் 14 நாட்களுக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அதிக விலைக்கு மாட்டிறைச்சி விற்கப்பட்டால் சட்டநடவடிக்கை

## அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் அமானுல்லா எச்சரிக்கை

(ஒலுவில் நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மாட்டிறைச்சிக் கடைகளில் அதிக விலைக்கு இறைச்சி விற்பனைசெய்வதாக அறியப்பட்டால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல்.அமானுல்லா தெரிவித்தார்.

எமது பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட அட்டாளைச்சேனை, ஒலுவில் மற்றும் பாலமுனை போன்ற பிரதேசங்களில் ஒரு கிலோ மாட்டிறைச்சி 800 ரூபாவுக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுவதாக தகவல்கள் அறியப்பட்டதைத் தொடர்ந்தே மேற்படி கண்டிப்பான அறிவித்தல் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பிரதேசங்களில் மாட்டிறைச்சியை குறிப்பிட்ட விலைக்கு விற்பனைசெய்ய வேண்டும் எனவும் அவ்வாறு குறிப்பிட்ட விலைக்கு விற்பனைசெய்ய முடியாவிட்டால் கடைகளை மூடுமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதுடன், ஒரு கிலோ மாட்டிறைச்சி 800 ரூபாவுக்கு அதிகமாக விற்பனை செய்யப்பட்டால் பொதுமக்கள் உடனடியாக எமக்கு அறிவிக்குமாறும் மேலும் தெரிவிக்கப்படுவதுடன், அவ்வாறு அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவது நிரூபிக்கப்பட்டால் கடை உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

அட்டாளைச்சேனை பிரதேசத்தைப் பொறுத்தவரையில் 16 மாட்டிறைச்சிக் கடைகள் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் அதிகாரத்தின்கீழ் சேவையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# வேகக் கட்டுப்பாட்டை இழந்த வேன் மின்கம்பத்தில் மோதி விபத்து



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

**மட்டக்களப்பில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த வேன் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் வாகனங்கள் இரண்டு சேதமடைந்துள்ளன.**

**மட்டக்களப்பிலிருந்து ஆரையம்பதி நோக்கி பயணித்த ஹயஸ் ரக வேன் முன்னால் சென்ற கே.டீ.எச். ரக வேனை முந்திச்செல்ல முற்பட்டபோது கட்டுப்பாட்டை இழந்த வேன் மின்கம்பத்துடன் மோதியதுடன், அருகில் தரித்து நின்ற சிறிய ரக லொறியுடனும் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளது.**

**குறித்த விபத்தை ஏற்படுத்திய வேன் உட்பட மூன்று வாகனங்களும் பலத்த சேதங்களுக்குள்ளாக்கியுள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.**

# மாணவர்களை இலக்குவைத்து போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட இருவர் கல்குடாவில் கைது

(வாழைச்சேனை நிருபர்)

பாடசாலை மாணவர்களை இலக் குவைத்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுவந்த குற்றச் சாட்டின்பேரில் தேடப்பட்டுவந்த போதைப்பொருள் வியாபாரிகள் இரண்டு பேர் முச்சக்கரவண்டியுடன் நேற்று (20) கல்குடா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு கல்குடா - பிறைந்துறைச்சேனைப் பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட இவர்களிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருட் பொதிகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கல்குடா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் சந்தன விதானகே தெரிவித் துள்ளார்.

கல்குடா பொலிஸ் பிரிவின் சில பகுதிகளில் அண்மைக்காலமாக ஒரு குழுவினர் மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதுகுறித்து பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டுவந்த நிலையில், இவர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங் மற்றும் வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பி.எம்.ஜயசுந்தர ஆகியோரின் வழிகாட்டலில் கல்குடா பொலிஸ் பிரிவில் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# மாநகர முதல்வரினால் அக்கரைப்பற்றில் கொரோனா விழிப்புணர்வு செயற்றிட்டம்





(அக்கரைப்பற்று நிருபர்)

நாட்டில் கொரோனா பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில், அக்கரைப்பற்று மாநகர சபையுடன் இணைந்து அனர்த்த முகாமைத்'துவக் குழு ஒழுங்குபடுத்தலில் பிரதேச சுகாதார அதிகாரி பணிமனை பங்குபற்றுதலுடனான கொரோனா விழிப்புணர்வு செயற்றிட்டம் அக்கரைப்பற்றில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று பஸ் நிலையம் உள்ளிட்ட மாநகர பகுதிகளில் அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இவ்விழிப்புணர்வு செயற்றிட்டத்தில் சமகாலத்தில் வீரியத்துடன் பரவும் கொவிட்-19 வைரஸ் குறித்த விழிப்புணர்வு பதாகை காட்சிப்படுத்தப்பட்டதுடன், பொதுமக்களின் சுகாதார பாதுகாப்பை வலியுறுத்தும் ஸ்ரிக்கர்களும் பஸ்களில் ஒட்டப்பட்டன.

இந்நிகழ்வுகளின்போது அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.றாசீக், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எவ்.எம்.ஏ.காதர், பொலிஸ் மற்றும் இராணுவ உயரதிகாரிகள், அனர்த்த முகாமைத்துவ குழு உறுப்பினர்கள், அக்கரைப்பற்று ஜும்ஆ பள்ளிவாசல்கள் நிர்வாகத்தினர், பிரதேச முக்கியஸ்தர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை இணையவழிக் கல்வியிலிருந்து விலகியிருப்போம்

## இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தலைவர் ஜெஸ்மி மூஸா



(வீரமுனை நிருபர்)

போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அனைத்து தொழிற்சங்க நடவடிக்கைகளையும் சட்ட ரீதியாகவே மேற்கொண்டு வருகிறோம். எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை இணையவழிக் கல்வியிலிருந்து விலகியிருப்பது தொடர்பாக கல்வியமைச்சின் செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளோம் - என இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தலைவர் ஜெஸ்மி எம்.மூஸா தெரிவித்துள்ளார்.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அதிபர் - ஆசிரியர் சம்பள முரண்பாடு உள்ளிட்ட விடயங்களுக்கான தீர்வை நோக்கி ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கும்போது அதன் தரத்தைக் குறைத்து மதிப்பிடும் கேவலமான செயல்களில் ஆசிரியர்கள் சிலர் செயற்படுவது கவலையளிக்கிறது.

ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேச்சுவார்த்தை உள்ளிட்டவைகளில் நாட்டின் நிலைமை கருதி எல்லா சங்கப் பிரதிநிதிகளும் இணையாதுவிட்டாலும் சங்கத்தின் ஏனைய உச்சபீடத்திலுள்ளவர்களின் பரவலாக்கல்களுடன் பிராந்திய ரீதியான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த ஒன்றிணைவினாலேயே கடந்த காலங்களை விட எமது போராட்டங்கள் கவனயீர்ப்பைப் பெற்றதாக மாறியுள்ளன.

இதனை விளங்கிக்கொள்ளாத சில வலயக் கல்விப் பணிப்பாளர்களும் அதிபர்களும், ஆசிரியர்களை முறைகேடாகப் பயன்படுத்த இன்றுவரை எத்தனித்துக்கொண்டிருக்கின்றனர்.

தொழிற்சங்க கூட்டிணைவுகளின் சக்தியையும் எல்லையையும் விளங்கிய ஆசிரியர்களுக்கு இவைகளை எதிர்க்கும், சுட்டிக்காட்டும் திறன் இல்லையென்றால் தங்களை விடக் கோழைகள் யார்தான் இருக்கமுடியும்.

பெருமளவான அதிபர்கள் எமது போராட்டத்தில் கைகோர்த்து நேரடியாகக் களத்தில் இருக்கும்போது சில அதிபர்கள் இணைய வகுப்புகளை நடத்துவதில் காட்டும் ஆர்வம் குறித்து மனவருத்தப்படாமல் இருக்க முடியாது. இணையவழி நிறுத்தமே நமது பிரதான ஆயுதங்களில் ஒன்றாக இருக்கும்போது அதனையே பாடசாலைகளில் விளம்பரப்படுத்தி நடத்துகின்ற ஆசிரியர் சமூகம் இதன்மூலம் சொல்ல வரும் செய்தி எனன ? நாடு முழுவதும் ஒரு கல்வி நாட்காட்டி இருக்கும்போது, அது முடக்கப்பட்டிருக்கும்போது உங்களது மாணவர்களுக்கு மாத்திரம் கற்பித்து என்ன பிரயோசனம் அடையப் போகிறீர்கள்?

ஆசிரியர்களால் சமூக ஊடகங்களில் இடப்படும் இணைய வகுப்புகளின் விபரங்களைப் பார்த்து பெற்றோர்களே கேள்வி கேட்கும் அளவுக்கு நிலை மாறியிருக்கிறதே? இது பற்றிய சிந்தனை தங்களுக்கு ஏற்படாமல் இருப்பது ஆசிரியர் சமூகத்திற்கே வெட்கக்கேடு என்பதனை நீங்கள் உணராமல் இருப்பது அதிசயமானது.

சட்ட ஏற்பாடுகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும்போது பாடசாலை அல்லது அலுவலகக் கட்டமைப்பினால் ஏதும் செய்து விடுவார்கள் என அஞ்சுகிறீர்களா? சொற்ப அளவிலான சுகாதாரத் துறையினர் நின்றுகொண்டே வைத்தியசாலைகளில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் போராட்டங்களில் பங்கெடுப்பதனை நீங்கள் காணவில்லையா? நாளைய சம்பள ஏற்றத்தினையும் அதன் பின்னால் உள்ள நன்மைகளையும் நீங்கள்தானே அடையப் போகிறீர்கள்?

கிழக்கு மாகாணத்திலுள்ள சில பாடசாலைகளும் அப்பாடசாலைகளிலுள்ள சில ஆசிரியர்களும் தொழிற்சங்க செயற்பாடுகளுக்கு எதிரான இவ்வாறான முன்னெடுப்புகளில் தொடராக ஈடுபட்டு வருவதாக சுட்டிக்காட்டப்படுவதனை நாம் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

நமது போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கும் ஆசிரியர்களின் செயற்பாடுகளைக் கேள்விக் குறியாக்காமல் ஒத்துழைப்பு இல்லாவிட்டாலும் போராட்ட இலக்குகளை அடையும்வரை அமைதி காக்குமாறு குறிப்பிட்ட ஆசிரியர்களையும் அதிபர்களையும் இலங்கை - இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கேட்டுக்கொள்வதாக மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமலையில் சொட்டு நீர்ப்பாசனமுறை தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் விவசாய நீர்ப்பாசனத்தில் சொட்டு நீர்ப்பாசனமுறை தொடர்பான செயலமர்வொன்று இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க, நேற்று பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பயிர்ச்செய்கையின் போது நீர் விரயமாவதை தடுக்க, சொட்டு நீர்ப்பாசன முறை தொடர்பிலான விழிப்புணர்வுகளை தம்பலகாமம் பிரதேச விவசாய போதனாசிரியர்கள் பயிர்ச்செய்கையாளர்களுக்கு விரிவுரையளித்தனர்.

இதில் கல்மெட்டியாவ வடக்கு, மீரா நகர், முள்ளிப்பொத்தானை கிழக்கு, பாலம் போட்டாறு கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய குறைந்தளவிலான பயிர்ச்செய்கையாளர்களை கொண்டு சுகாதார நடைமுறைகளை பின்பற்றி குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், காணி பயன்பாட்டு திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கந்தசாமி தயாலினி, பயிர்ச்செய்கையாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



# சிம்பாப்வேயில் நடைபெறவுள்ள தகுதிகாண் போட்டிகள்

2022 ஐ.சி.சி. மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் தகுதிகாண் போட்டிகள் சிம்பாப்வேயின் ஹராரே நகரில் எதிர்வரும் நவம்பர் 21 முதல் டிசம்பர் 5 வரை நடைபெறவுள்ளதாக ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

ஐ.சி.சி. உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரானது 2022ஆம் ஆண்டு நியூஸிலாந்தில் மார்ச் 4 முதல் ஏப்ரல் 3 வரை நடைபெறவுள்ளது. மொத்தம் 8 அணிகள் மோதவுள்ள தொடரில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து ஆகிய 5 அணிகள் ஏற்கனவே தகுதிபெற்றுவிட்டன. நடைபெறவுள்ள குறித்த தகுதி சுற்று ஆட்டங்கள் மூலமாக எஞ்சிய 3 அணிகள் தெரிவாகவுள்ளன.

தகுதிகாண் போட்டிகள் மூலமாக அந்த 3 அணிகளுடன், அடுத்த ஐ.சி.சி. மகளிர் சம்பியன்ஷிப்பில் விளையாட இருக்கும் கூடுதலான 2 அணிகளும் தெரிவாகவிருக்கின்றன. ஏனெனில், மூன்றாவது மகளிர் சம்பியன்ஷிப்புக்கான அணிகளின் எண்ணிக்கை எட்டிலிருந்து பத்தாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சிம்பாப்வேயில் நடைபெறவுள்ள தகுதிகாண் போட்டிகளில் பங்களாதேஷ், அயர்லாந்து, நெதர்லாந்து, பாகிஸ்தான், பப்புவா நியூகினி, இலங்கை, தாய்லாந்து, அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே ஆகிய 10 அணிகள் களம் காணவிருக்கின்றன.

# உலகக்கிண்ணத் தொடருக்கு முன்னர் ஓமானுடன் மோதும் இலங்கை அணி

ஏழாவது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரானது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், உலகக்கிண்ணத் தொடருக்கு முன்னதாக இலங்கை கிரிக்கெட் அணியானது ஓமானுக்கு இருதரப்பு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடவுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியானது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரின் முதல் சுற்றில் நமீபியா, அயர்லாந்து மற்றும் நெதர்லாந்து அணிகளை எதிர்கொள்கிறது. இந்நிலையிலேயே ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடருக்கு பயிற்சியாக இலங்கை அணி ஓமான் அணியுடன் இரு போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடுகிறது.

குறித்த இரண்டு போட்டிகளானது ஒக்டோபர் 7 மற்றும் 9ஆம் திகதிகளில் எமிரேட்டில் அமைந்துள்ள ஓமான் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணி தங்களது முதல் போட்டியில் ஒக்டோபர் 18ஆம் திகதி நமீபிய அணியை எதிர்கொள்கிறது.



# சாதிப்பதற்கு ஊனம் தடை அல்ல

### நீச்சலில் உதவும் சாதனங்கள்




பார்வை குறைபாடுள்ள நீச்சல் வீரர்களுக்கு டேப்பர்ஸ் என்ற உதவியாளர்கள் உள்ளனர். அவர்கள் தட்டுதல் சாதனம் பயன்படுத்தி நீச்சல் வீரர்களை வழிநடத்துவார்கள். நேராகப் போகவேண்டும், எப்போது திரும்ப வேண்டும் அல்லது அவர்கள் சுவரை நெருங்கும்போது தொட்டு தெரிவிக்க வேண்டும். இதற்காக ஒரு சாதனம் உள்ளது. வழக்கமாக ஒரு மென்மையான முனை துண்டுடன் கூடியது. நீளம், தலை, தோள்பட்டை அல்லது பின்புறத்தில் நீச்சலைத் தட்ட முடியும். இந்த சாதனங்கள் வீட்டில் தயாரிக்கப்படலாம் - ஒரு நிலையான சாதனம் இன்னும் இல்லை - அவற்றைப் பயன்படுத்துவதற்கு முன்பு அவை அனைத்தும் ஐபிசியால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.



### சக்கர நாற்காலி ஓட்டப்போட்டி

ரேசிங் சக்கர நாற்காலிகள் பெரும்பாலும் அலுமினியத்திலிருந்து தயாரிக்கப்படுகின்றன. ஆனால், உற்பத்தியாளர்கள் கார்பன் பைபர் தொழில்நுட்பத்தை அதிக இலகுவாகவும் நிலையானதாகவும் மாற்ற அதிகளவில் பயன்படுத்துகின்றனர். மற்ற விளையாட்டுகளைப் போலவே, சக்கர நாற்காலி இருக்கைகளையும் ஒரு விளையாட்டு வீரரின் உடலுக்குத் தனிப்பயனாக்கலாம். ஒரு பந்தய சக்கர நாற்காலியிலுள்ள சக்கரங்கள் ஒரு தடகள வேகத்தில் செல்லும்போது பக்கவாட்டு நிலைத்தன்மையைச் சேர்க்க 10-15 டிகிரி கேம்பரையும் கொண்டுள்ளது.

விளையாட்டு வீரர்கள் தங்கள் நாற்காலிகளை தள்ளுவதற்கு பயன்படுத்தும் கையுறைகள் முக்கியம். ஏனெனில், அவை கூடுதல் மிதி சக்தியை வழங்குகின்றன. இந்த நாட்களில் 3 பிரிண்டிங் தொழில்நுட்பம் போட்டிகளுக்கு தனிப்பயனாக்கப்பட்ட கையுறைகளை உருவாக்க பயன்படுகிறது.



# டீன் ஸ்டார் விளையாட்டுக் கழக சீருடையை அறிமுகம் செய்துவைத்தார் முதல்வர் ஸகி



(நூருல் ஹுதா உமர்)

அக்கரைப்பற்று டீன் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த புதிய சீருடை அறிமுக நிகழ்வு கடந்த புதன்கிழமை அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகியின் தலைமையில் அக்கரைப்பற்று மாநகர சபை கேட்போர் கூடத்தில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இடம்பெற்றது.

குறித்த இந்நிகழ்வின்போது டீன் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஜே.சாஜித் அக்ரம், செயலாளர் எஸ்.நப்லான், பொருளாளர் ஏ.ஏ.ஹாலிக் மற்றும் ஏ.எம்.ரஹீம் உள்ளிட்ட அணியின் முக்கியஸ்தர்கள், அணியின் வீரர்கள் உட்பட நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.




விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# எஸ்.எல்.சி. இன்விடேஷனல் இருபதுக்கு 20 லீக் இன்று இரு போட்டிகள்




இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்று வருகின்ற இன்விடேஷனல் இருபதுக்கு 20 லீக் தொடரில் இன்று இரண்டு போட்டிகள் நடைபெறவுள்ளன. நேற்று நடைபெறவிருந்த குறித்த இரண்டு போட்டிகளுமே இன்றைய தினத்தில் நடைபெறவுள்ளன.

கிரிக்கெட் வீரர்கள் தங்கியிருந்த ஹோட்டலின் ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டதைத் தொடர்ந்து போட்டி அட்டவணையில் மாற்றம் ஏற்பட்டன. கடந்த 17ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது ஹோட்டல் ஊழியர்கள் சுமார் 14 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தொடரில் விளையாடுகின்ற வீரர்கள் அனைவரும் வேறு ஹோட்டலுக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே போட்டி அட்டவணையில் மாற்றம் ஏற்பட்டது.

அந்த அடிப்படையில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறுகின்ற 9ஆவது போட்டியில் அஷான் ப்ரியஞ்ஜன் தலைமையிலான எஸ்.எல்.சி. க்ரீன்ஸ் - தனஞ்ஜய டி சில்வா தலைமையிலான எஸ்.எல்.சி. ப்ளூஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இதேவேளை, இரவு 7 மணிக்கு நடைபெறுகின்ற 10ஆவது போட்டியில் தசுன் சானக்க தலைமையிலான எஸ்.எல்.சி. க்ரேஸ் - தினேஷ் சந்திமால் தலைமையிலான எஸ்.எல்.சி. ரெட்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. தற்போது 8 போட்டிகள் நிறைவுபெற்றுள்ள நிலையில், தசுன் சானக்கவின் எஸ்.எல்.சி. க்ரேஸ் அணி அனைத்து போட்டிகளிலும் வெற்றிபெற்று 8 புள்ளிகளுடன் முதலிடத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




# ஒலிம்பிக்கில் சறுக்கிய தருணங்கள்

உக்ரேனிய துப்பாக்கி சுடும் வீரர் செர்ஹி குலிஷ் டோக்கியோவில் 50 மீற்றர் போட்டியில் இறுதிப் போட்டியின் 30 ஷாட்களுக்குப் பிறகு நான்காவது இடத்தைப் பிடித்தார். 2016இல் ரியோவில் நடந்த 10 மீற்றர் துப்பாக்கி போட்டியில் குலிஷ் வெள்ளி வென்று தரவரிசையில் இரண்டாவது இடத்தில் இருக்கிறார். தங்கக் கனவுடன் போட்டியில் கலந்துகொண்டவர் தகுதிநீக்கம் செய்யப்பட்டார்.



இறுதிப் போடியில் விளையாடிய செர்ஹி குலிஷ் முதல் நான்கு சுற்றுகளில் அதிக புள்ளைகளைப் பெற்று சக போட்டியாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தார். ஐந்தாவது சுற்றில் கலந்துகொண்ட குலிஷ் இலக்கை நோக்கிச் சுட்டார். இன்னொருவரின் இலக்கை குலிஷின் துப்பாக்கி தாக்கியது.

குலிஷும் ஏனையவர்களும் அதிர்ச்சியடைந்தனர். குலிஷ் ஏன் இப்படி தவறு செய்தார் என அனைவரும் வியப்புடன் நோக்கினர். சில நொடிகள் மௌனமாக நின்ற குலிஷ் தலையை தொங்கப்போட்டவாறு வெளியேறினார்.

குலிஷ் இலக்கைக் குறிபார்த்த போது அவரது கோட் பட்டன் ஒன்று தளர்ந்தது. அதனால் அசௌகரியப்பட்ட குலிஷ், சற்று நிலை தடுமாறினார். குறிக்கப்பட்ட விநாடிக்குள் இலக்கை நோக்கிச் சுட வேண்டும். குனிந்து பட்டனைப் பார்த்த குலுஷ் நிமிர்ந்தபோது தனது குறியை தவிர்த்து இன்னொருவரின் இலக்கைப் பார்த்தார். அதனால் குறி தவறியது.




# நியூஸிலாந்து தொடருக்கான பங்களாதேஷ் குழாம் அறிவிப்பு

நியூஸிலாந்து அணியுடன் சொந்த மண்ணில் நடைபெறவுள்ள இருபதுக்கு 20 சர்வதேச தொடருக்கான பங்களாதேஷ் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. 19 பேர் கொண்ட மஹ்மதுல்லாஹ் ரியாத் தலைமையிலான பங்களாதேஷ் அணியின் குழாமில் முக்கிய வீரர்களான முஷ்பிகுர் ரஹீம் மற்றும் லிட்டன் தாஸ் ஆகியோர் அணிக்கு திரும்பியுள்ளனர்.

ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரானது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்கு ஒரு பயிற்சியாக நியூஸிலாந்து கிரிக்கெட் அணி, பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடுகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து போட்டிகள்கொண்ட தொடரின் முதல் போட்டி செப்டெம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், குறித்த தொடருக்கான பங்களாதேஷ் அணியின் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. பங்களாதேஷ் அணியானது இறுதியாக அவுஸ்திரேலியா அணியுடன் நடைபெற்ற 5 போட்டிகள்கொண்ட இருபதுக்கு இருபது சர்வதேச தொடரை 4-1 என்ற அடிப்படையில் கைப்பற்றி வரலாற்று சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது.



**நியூஸிலாந்து தொடருக்கான பங்களாதேஷ் குழாம்**

மஹ்மதுல்லாஹ் ரியாத் (அணித்தலைவர்), ஷகீப் அல்-ஹஸன், முஷ்பிகுர் ரஹீம், லிட்டன் தாஸ், சௌமியா சர்கார், மொஸாதிக் ஹொஸைன், அபிப் ஹொஸைன், நயிம் ஷேக், நூரூல் ஹஸன் சொஹான், சமிம் ஹொஸைன், ரூபல் ஹொஸைன், முஸ்தபீசுர் ரஹ்மான், தஸ்கின் அஹமட், சைபுடீன், சூரிபுல் இஸ்லாம், தைஜூல் இஸ்லாம், மெஹதி ஹஸன், அமினுல் இஸ்லாம் பிப்லொப், நாஸும் அஹமட்.